RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 7 • ஜனவரி 2026 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்

## இளைஞர் தின
## சிறப்பிதழ்




RAMRAJ
COTTON
DHOTIS • SHIRTS
Available at Ramraj Showrooms & All leading Textile Shops
| Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

நமக்குள் இருக்கும் ஆற்றலை முழுமையாக உணர்ந்து
நம்பிக்கையுடன் செயல்களைச் செய்யத் தொடங்கி
நல்வெற்றிகளைப் புத்தாண்டில் அடைய வழிகாட்டும்

# இளைஞர் தின
# சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

'எதை நினைக்கிறோமோ அதுவாகவே நாம் ஆகிறோம்' என்பது சுவாமி விவேகானந்தர் நம் தேசத்து இளைஞர்களுக்குக் கூறிய மந்திரச்சொல். ஒரு நாட்டின் உண்மையான வலிமை அதன் ஆயுதங்களிலோ, படைபலத்திலோ இல்லை. அந்த நாட்டு இளைஞர்களின் எண்ணத்திலும், செயல்திறனிலும் இருக்கிறது. இந்தியாவின் மிகப்பெரிய பலம் நம் தேசத்து இளைஞர்கள். மக்கள் தொகையில் 65 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் 35 வயதுக்குள் இருக்கிறார்கள். அதிலும் 50 விழுக்காட்டிற்கு மேல் 25 வயதுக்குள் இருக்கிறார்கள். உலகில் அதிக இளம்வயதினரைக் குடிமக்களாகக் கொண்ட நாடு இந்தியா. இந்த இளைஞர் சக்தி சரியாக வழிநடத்தப்பட்டால் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி என மாபெரும் சாதனைகளை நிகழ்த்துவோம்.

இளைஞர்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, கலை, தொழில்நுட்பத் திறன் போன்றவற்றில் அரசும், அரசியல் தலைவர்களும் கவனம் செலுத்தமுடியும். ஆனால், அவர்களின் எண்ணங்களைச் சிறப்பாக வடிவமைக்க, சரியான ஆன்மிக வழிகாட்டல் அவசியம். இணையம் மூலம் உலகம் முழுக்க உள்ள முகம் தெரியாத நபர்களுடன் செல்போன் வழியே தொடர்புகொள்ளும் நம் இளைஞர்கள், வீட்டுக்குள் அந்நியப்பட்டுத் தனிமையில் அதிகம் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. மாபெரும் இளைஞர் சக்தி தேவையற்ற கவனச் சிதறல் மூலம் வீணடிக்கப்படுவதாக உளவியல் நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட ஆய்வு, 'இந்தியாவில் 20 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மனச்சோர்வு, ஊக்கமின்மை, போதைப்பொருள் பயன்பாடு, எதிர்மறை எண்ணங்கள் எனப் பல்வேறு சிக்கல்களால் பாதிக்கப்படுகிறார்கள்' எனக் கவலை தெரிவித்திருக்கிறது. இளைஞர்களை இந்நெருக்கடியில் இருந்து மீட்க, சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் சிறந்த வழிகாட்டியாக நிச்சயம் இருக்கும்.

விவேகானந்தர், 'உடல், மனம், ஆன்மிகம் ஆகிய மூன்றின் வளர்ச்சியே இளைஞர் சக்திக்கு அடிப்படை' என்பதை வலியுறுத்தினார். நம் ஒவ்வொருவரையும் பார்த்து, "உங்களுக்குள் இருக்கும் உள்ளார்ந்த சக்தியில் நம்பிக்கை கொள்ளுங்கள்; அது உங்களை எந்த அழுத்தத்திலிருந்தும் விடுவிக்கும்" என்று உறுதிபடக் கூறினார். 'எழு, விழித்திரு, இலக்கை அடையும் வரை சோராதே' என நாட்டின் இளைஞர்களைத் தட்டி எழுப்பினார்.

சுவாமி விவேகானந்தரின் கால்கள், காந்தியடிகளுக்கு முன்னோடியாக மக்களை நோக்கி நடந்தன. ஊர் ஊராகச் சென்று உத்வேகமிக்க சொற்பொழிவுகளை நிகழ்த்தி வழிகாட்டினார். 'எல்லாச் சாதனைகளும் தடைகளைத் தாண்டுவதால் மட்டுமே நிகழ்த்தப்படுகின்றன' என்பதை விளக்கி, 'தடைகளைக் கண்டு அஞ்சவேண்டாம்' என்று இளைஞர்களுக்கு ஊக்கம் அளித்தார். ஞானம், பக்தி, விவேகம், வைராக்கியம் ஆகிய நான்கையும் வளர்த்துக்கொள்ளச் சொன்னார். 'மாற்றங்களைத் தழுவுங்கள்; தோல்விகளை வாய்ப்பாகப் பாருங்கள்' என்றார்.

அவரின் வழிகாட்டல், அறிவுரைகள் அனைத்தும் எளிமையாகவும் உண்மையாகவும் இருந்தன. அதனால் இளைஞர்கள் அவரின் பின்னால் நம்பிக்கையுடன் நின்றனர். ஒவ்வொரு மனிதரும் இயல்பில்



தெய்வீகமானவர்கள் என்றும், அந்தத் தெய்வீகத்தை நம் எண்ணத்திலும், செயலிலும் வெளிப்படுத்துவதே வாழ்வின் நோக்கம் என்றும் அவர் தெளிவுபடுத்தினார். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை உணர்த்த தன் குருவின் பெயரில் இராமகிருஷ்ண மடம் நிறுவி, கல்வி வாய்ப்புகளைத் தந்து, லட்சக்கணக்கான நம்பிக்கை இளைஞர்களை உருவாக்கினார்.

'உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக்கூடாது' என்ற அவரின் வார்த்தைகளுக்கு வலிமை அதிகம். அதைப் பின்பற்றுகிறவர்களின் வாழ்விலும் வலிமை அதிகரிக்கும். 'இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்' என அறைகூவல் விடுத்தார்.

சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டுதலை ஏற்று, ராம்ராஜ் காட்டன் நிறுவனம் சமீபத்தில் ஒரு சிறந்த முயற்சியை மேற்கொண்டது. எங்கள் நிறுவனத்தின் விற்பனையாளர்கள், டீலர்கள் சந்திப்பு ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். சம்பிரதாயமான சந்திப்பாக இல்லாமல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது, தொழில் சவால்களை விவாதிப்பது, இலக்குகளை நிர்ணயம் செய்வது போன்ற முக்கியமான செயல்பாடுகளை சந்திப்பின் நோக்கமாகக் கொள்வோம். இந்த ஆண்டு அந்தச் சந்திப்பில் ஒரு புதுமுயற்சியை மேற்கொண்டோம்.

ராம்ராஜ் காட்டன் 40 ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக இயங்கிவருகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே எனக்கு அடுத்த தலைமுறையைத் தலைமை ஏற்கும்படி சொல்லி, பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்து வருகிறேன். அவர்களும் தங்கள் பணிகளை மிகச்சிறப்பாகச் செய்துவருகின்றனர். எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வது என்பது எங்கள் தலைமுறையைச் சேர்ந்தவர்களின் இயல்பு. இந்தத் தலைமுறையினர் தொழில்நுட்பப் புரட்சிகள் நடக்கும் காலத்தில் வளர்கிறவர்கள். நாம் அதிகம் மெனக்கெட்டு செய்யும் செயல்களை, அதைவிடச் சிறப்பாகத் தொழில்நுட்பத்தின் துணையோடு எளிதாகச் செய்துவிடுகிறார்கள். உதாரணமாக, கடையில் எந்தப் பகுதியில் காட்சிப்படுத்தி இருக்கும் ஆடை அதிகம் விற்பனை ஆகிறது என்பதைக்கூடத் துல்லியமான கணக்கோடு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சொல்லி, அந்தப் பகுதியில் கவனம் செலுத்துகிறார்கள்.

நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் அடுத்த தலைமுறை வந்திருப்பது போலவே, விற்பனையாளர்கள், டீலர்கள் அளவிலும் நான் இணைந்து வர்த்தகம் செய்தவர்களின் அடுத்த தலைமுறையினர் பொறுப்புக்கு வந்துவிட்டனர். கடைகளுக்குப் போகும்போது, 'இது என் மூத்த பையன். இப்போ இந்தக் கடைய இவருதான் பாத்துக்கிறாரு. இது என் கடைசிப் பொண்ணு. பிசினஸை இவங்கதான் பாத்துக்கிறாங்க' என்று சொல்வது சாதாரணமாகிவிட்டது.


The Culturepreneur

2025, டிசம்பரில் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்ட சந்திப்பில், அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களையும் அழைத்து வரும்படி கேட்டுக்கொண்டோம். அவர்களுக்கு வழிகாட்ட தொழில் துறையில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை அழைத்து அவர்களோடு உரையாட ஏற்பாடு செய்திருந்தோம். இதற்கு முந்தைய சந்திப்புகளில் பெரும்பாலும் ஐம்பது வயது கடந்தவர்களே இருப்பார்கள். இந்த முறை அவர்களின் பிள்ளைகள் அதிகம்பேர் கலந்துகொண்டார்கள். இந்தச் சந்திப்பே இளமை ததும்பி புது உற்சாகத்தை அளித்தது. மூத்தவர்களின் அனுபவமும் இளைய தலைமுறையின் ஆற்றலும் இணையும்போது தொழிலில் வெற்றி உறுதியாகிறது.

சமீபத்தில் ஆஸ்ரேலியாவில் ஒரு விழாவுக்கு என்னைச் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார்கள். குடும்பத்தினரும் வந்திருந்தனர். ஒரு இடத்திற்கு உள்ளே போகவும், வெளியே வரவும், உணவகத்தில் ஆர்டர் கொடுக்கவும், பணம் கட்டவும் என அனைத்திலும் தொழில்நுட்பமே இருந்தது. புதிய சூழலாக இருந்தாலும் எட்டு வயது இருக்கும் என் பேரன் உடனுக்குடன் கற்றுக்கொண்டு வேலைகளைச் செய்து முடித்தான். 'சிறுவனாச்சே, அவனுக்கு என்ன தெரியும்' என அவனைத் தவிர்த்து நான் முயற்சிக்கும்போதெல்லாம் தடுமாறினேன். ஒருநாளில் ஆறேழு முறை என் பேரன், 'அப்பச்சி, நீங்க இருங்க. உங்களுக்கு அது தெரியல. நானே பண்றேன்' எனச் சொன்னான்.

ஒருவகையில் அவன் சொன்னது முற்றிலும் உண்மை. அவனுக்குத் தெரிந்த அளவுக்கு எனக்கு அந்தப் புதிய தொழில்நுட்பங்கள் தெரியவில்லை. அவனுடைய கற்றல் திறனுக்கு முன்னால் என்னால் போட்டி போட முடியாது எனப் புரிந்துகொண்டேன். 'நாட்டின் எதிர்காலம் நம் இளம்தலைமுறையின் கையில் இருக்கிறது' என சுவாமி விவேகானந்தர் ஏன் வலியுறுத்தினார் என்பதை உணரமுடிந்தது. அவர் பிறந்த தினமான ஜனவரி 12-ம் நாளை இளைஞர் தினமாக நாடு கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது. அதைக் கொண்டாடும்விதமாக, இந்த மாதம் வெண்மை 'இளைஞர் தினச் சிறப்பிதழாக' மலர்கிறது.

புத்தாண்டில் இளம் தலைமுறையினர் தங்களிடம் உள்ள ஆற்றலின் சக்தியை உணர்ந்து செயல்பட வாழ்த்துவோம். அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துகள்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# இளமையில் இதுவும் கடந்து போகும்!

ஒரு கிராமத்தைப் பக்கத்து நகரத்துடன் இணைக்கும் சாலையின் குறுக்கே நதி ஓடியது. மழைக்காலங்களில் அதில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது, கிராமத்திலிருந்து யாரும் வெளியில் போக முடியாது. எனவே, அந்த நதியின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு இரண்டு இளைஞர்கள் முடிவெடுத்தார்கள்.

ஒருவன் அழகான வடிவமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தான். "இந்த அழகான பாலத்தைப் பார்ப்பதற்காகவே நம் ஊருக்கு நிறைய சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். அப்படி இதைக் கட்டப் போகிறேன்" என்றான் அவன்.

இன்னொருவனோ, "அழகைவிடத் தேவைக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஒரு பாலம் என்பது மனிதர்கள் கடந்து செல்வதற்குத்தானே! அவர்களின் எல்லாத் தேவைகளுக்கும் ஏற்றபடி இது இருந்தால் போதுமே" என்றான் அவன்.

இருவருக்கும் கருத்து வேறுபாடு வலுத்ததால் பிரிந்துவிட்டனர். ஆனால், தாங்கள் நினைத்தபடி பாலம் கட்டுவதில் உறுதியாக இருந்தனர். அதனால் தனித்தனியாகப் பாலங்கள் கட்டினர். ஒன்றுக்கு இரண்டாகப் பாலங்கள் உருவானதால், ஊர் மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். முதல் இளைஞன், தான் படித்த ஆர்க்கிடெக்ட் படிப்பு அனுபவத்தின் அடிப்படையில் மிக அழகான வடிவமைப்பில் பாலம் கட்டினான். இரண்டாவது இளைஞன், பாலத்தின் அழகைப் பொருட்படுத்தவில்லை. கிராமத்தில் கிடைத்த கற்களில் வலிமையான கற்களை எடுத்துப் பயன்படுத்திப் பாலம் கட்டினான்.

அடுத்த முறை வெள்ளம் வந்தபோது, அழகான பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. அழகான தோற்றத்தில் அக்கறை காட்டிய முதல் இளைஞன், அது உறுதியாக இருக்க வேண்டும் எனக் கவனிக்காமல் போனதன் விளைவு இது. இரண்டாவது இளைஞன் கட்டிய பாலம் வலிமையாக இருந்ததால், ஊர் மக்களுக்கு அதுதான் பயன்பட்டது.

வலிமையான அடித்தளம் இருந்தால் பாலம் உறுதியாக இருப்பது போலவே, இளமையில் வலிமையான அடித்தளம் போட்டால்தான் வாழ்க்கை வளமாக இருக்கும். இதைப் புரிந்துகொள்ளாதபோது இளைய தலைமுறைக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

டீன் ஏஜ் பருவம் என்பது கிட்டத்தட்ட பெருமழை பெய்யும்போது குடை இல்லாமல் நிற்பதைப் போன்ற குழப்பமான பருவம். மழையில் நனையாமல் இருக்க எங்காவது ஓடத் தோன்றும். ஆனால், ஓடினால் சேற்றில் வழுக்கி விழ நேரிடும். போகும் திசையில் ஒதுங்குவதற்கு இடம் இருக்குமா என்று



தெரியாது. இளமைப் பருவத்தில் உணர்வுகள் கொந்தளிக்கும். முதலில் குழப்பம் வரும், அதைத் தொடர்ந்து கோபம் வரும். இந்த எல்லாம் தெளிந்தால்தான் நம்பிக்கை துளிர்க்கும். நிறைய பேர் அதுவரை காத்திருப்பதில்லை.



எதைச் செய்தாலும், அது சரியா, தவறா என்ற குழப்பம் ஏற்படும். சரியாகச் செய்திருப்பதாக நினைத்தாலும், சுற்றிலும் இருப்பவர்கள் எல்லோருமே கண்காணித்து, ''ஏன் இப்படி தப்பு செய்யறே?'' என்று சீண்டிக்கொண்டே இருப்பார்கள். சம வயதில் இருக்கும் யாருடனாவது ஒப்பிட்டு, "அவனைப் பாரு, அவன் எவ்வளவு நல்லா படிக்கிறான். நீயும் இருக்கியே!'' என்று சொல்வார்கள். "அவளைப் பாரு, அவ அம்மா சொல்ற பேச்சுக்கு மறு பேச்சு பேசறதில்லை. நீ எதைச் சொன்னாலும் எதிர்த்துப் பேசறே!" என்று கோபம் கொள்வார்கள்.

"நீ திருந்தணும்" என்பார்கள் பெற்றோர்கள். "அப்பா, அம்மா பேச்சைக் கேட்டு நல்ல பையனா இருந்துக்கோ" என்பார்கள் உறவுகள். ''ஏன்டா இப்படி இருக்கே'' என்று குழப்பத்தை இன்னும் கிளறுவார்கள் நண்பர்கள். கல்லூரியிலோ, ''உன்னை எப்படி சமாளிக்கறதுன்னு எங்களுக்குத் தெரியலை'' என்று எரிச்சலுடன் சொல்வார்கள் பேராசிரியர்கள். குழப்பத்தின் உச்சத்தில், "என்னை எப்படி சமாளிக்கறதுன்னு எனக்கே தெரியலை" என்று வெடித்துக் கத்த வேண்டும் போல இருக்கும் பலருக்கு! பெருமழையில் குடையில்லாமல் சிக்கும்போது எந்தத் திசையில் ஓடுவது என்று குழப்பம் வருமே, அப்படிப்பட்ட நிலை!

பலரையும் போய்ப் பார்க்கும்போது இந்தக் குழப்பம் அதிகமாகும், பல இடங்களுக்குப் போகும்போது அதிகரிக்கும். பல விஷயங்களைக் கேட்கும்போது அதிகரிக்கும். டீன் ஏஜ் பருவத்தில் மனதுக்குள் எழும் போராட்டம், மற்ற வயதினருக்குப் புரியாது.

"உன் தனித்தன்மையைப் புரிந்துகொள்! யாரோடும் உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே'' என்று அறிவுரை சொல்லும் பெரியவர்களே, "அந்தக் காலத்துல நாங்க எல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? உங்களுக்கு எல்லாமே சுலபமா கிடைச்சிடுது" என்று ஒப்பிட்டுப் பேசுவார்கள். ரேஸ் பைக் போன்ற நவீன இருசக்கர வாகனத்தில் சீறிப் பாயும் இளைஞர்களைப் பார்த்ததும், "அந்தக் காலத்துல நாங்க ஐந்து மைல் சைக்கிள் மிதித்துப்போய் பள்ளிக்கூடம் படித்தோம். இந்தக் காலத்துப் பசங்களுக்கு லட்சக்கணக்கில் பணம் போட்டு இப்படி பைக் வாங்கிக்கொடுத்து ஊர் சுத்த விடறாங்க" என்று அந்த இளைஞர்களின் பெற்றோரைத் திட்டுவோர் நிறைய பேர்.

"எங்க காலத்துல எந்த டெக்னாலஜியும் இல்லை. ஆனால் நாங்க ஒழுக்கமா இருந்தோம். இன்னைக்கு உங்களுக்கு எல்லா டெக்னாலஜியும் கிடைச்சிருக்கறதால ஒழுக்கம் குறைஞ்சுடுச்சு" என்று விமர்சனம் செய்கிறார்கள். இளைய தலைமுறை இயல்பாக இருப்பதையே மரியாதைக்குறைவு என்று கண்டிக்கிறார்கள். மொத்தத்தில் இந்த உலகம், சுற்று வட்டாரம், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர் என்று எல்லோரும் வழங்கும் சான்றிதழ், "இதுவரை இருந்ததுலேயே மோசமான ஜெனரேஷன், இப்போ இருக்கும் ஜெனரேஷன்தான்" என்பதுதான். கல்லூரியிலும், "இதுவரை நான் பார்த்ததுலயே மோசமான பேட்ச் இதுதான்" என்று பேராசிரியர்கள் சொல்வார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த டயலாக் மாறாது என்பது வேறு விஷயம்!

தலைமுறை இடைவெளி என்பது எல்லாக் காலத்திலும் இருப்பதுதான்! தங்களைப் போல இல்லாத எல்லோரையும் தவறானவர்களாகப் பார்க்கும் மனநிலை பலரிடம் இருக்கிறது. இளைய தலைமுறையை அப்படித்தான் கடந்த காலத் தலைமுறையினர் பார்க்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ளும் குடும்பங்களில் இடைவெளி இருப்பதில்லை.

இன்று கிடைத்திருக்கும் அத்தனை வசதிகளும் இளைய தலைமுறைக்கு நிறைய சுதந்திரத்தைக் கொடுத்திருக்கின்றன. போக்குவரத்து, கல்வி, பாதுகாப்பு என எல்லாமே மேம்பட்டுள்ளன. இவ்வளவு சுதந்திரம் கிடைத்திருக்கும் இந்த வாழ்வில், அவர்கள் மனதளவில் சுதந்திரமாகச் சிந்திக்கிறார்களா என்பது முக்கியம். இந்த எல்லாக் குழப்பங்களுக்கு மத்தியிலும் கற்றுக்கொண்டும், சகித்துக்கொண்டும் வளர்வதற்கு அந்தச் சுதந்திரம் வழிகாட்டும். மனதிலிருந்து கோபத்தைத் துரத்தி நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்யும். டீன் ஏஜில் சுதந்திரமாகச் சிந்தித்து எதையும் புரிந்துகொள்ளும் பக்குவம் பெறுங்கள். ●

இளைஞன் ஒருவன் தனது பைக்கை வேகமாக ஓட்டிச் சென்றான். எதிர்பாராதவிதமாகச் சாலையின் நடுவில் இருக்கும் தடுப்பில் மோதி கீழே விழுந்துவிட்டான். அவனுக்கும் அடிபட்டது, பைக் நிறைய சேதமடைந்தது. தன் காயங்களைக்கூடப் பொறுத்துக்கொண்டு பைக்கை சர்வீஸ் விடச் சென்றான். அனுபவம் வாய்ந்த மூத்த மெக்கானிக் ஒருவர் அதைப் பரிசோதித்துவிட்டு, “இது மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. சரிசெய்ய 50 ஆயிரம் ரூபாய் செலவாகும். கூடுதலாக 50 ஆயிரம் ரூபாய் செலவழித்தால் புது பைக்கே வாங்கலாம். நிறைய இடங்களில் நசுங்கிப் போன இதைச் சரிசெய்ய 50 ஆயிரம் ரூபாய் செலவிடுவதற்குப் பதிலாக, நீங்கள் புது பைக் வாங்கலாம்” என்றார்.

இளைஞன் மறுத்து, “இல்லை. இது எனக்கு ராசியான பைக். நான் முதன்முதலில் வாங்கியது. இதையே பழுது பார்த்து ஓட்டுகிறேன்” என்றான். அதைச் சரிசெய்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர ஒரு வாரம் ஆனது. அவன் மகிழ்ச்சியுடன் பைக்கை எடுத்துக்கொண்டு போனான்.

பத்து நாட்கள்கூட ஆகியிருக்காது. அவன் திரும்பவும் அந்த பைக்கை மோசமான நிலையில் எடுத்துவந்தான். இம்முறை மரத்தில் மோதிவிட்டதாகச் சொன்னான். அதே மூத்த மெக்கானிக் மீண்டும் அவனுக்கு ஆலோசனை சொன்னார். “இப்போதும் இதைச் சரிசெய்ய 50 ஆயிரம் ரூபாய் ஆகலாம். இரண்டு முறை அடிபட்டு பலவீனமான நிலையில் இருக்கும் பைக்கை மீண்டும் மீண்டும் செலவு செய்து புதிது போல மாற்றுவது புத்திசாலித்தனம் இல்லை. அதற்குப் பதிலாகப் புதிய வண்டியே வாங்கிவிடலாம்” என்றார்.

இப்போதும் அவன் கேட்கவில்லை. மெக்கானிக் அப்படியே செய்துகொடுத்தார். ஒரு மாதம் கழித்து அதே இளைஞன் மீண்டும் வந்தான். இம்முறை அவனுக்கும் பலமான அடி, பைக் அடையாளம் தெரியாத அளவுக்குச் சேதமடைந்து இருந்தது. “இப்போது எனக்குச் சிகிச்சை செய்துகொள்ளவும் என்னிடம் பணம் இல்லை, பைக்கை சரி செய்யவும் பணமில்லை. புது பைக் வாங்குவதற்கு எளிதில் கடன் கிடைக்கிறது. அதனால் புதுசு வாங்குகிறேன். இந்தப் பழைய பைக்கை வந்த விலைக்கு வாங்கிக்கொள்ளுங்கள்” என்றான்.

வாழ்க்கையிலும் இப்படித்தான் மாற்ற முடியாத விஷயங்களை மாற்றவும், சரிசெய்யவும் நாம் நிறைய முயற்சி செய்கிறோம். அதற்காக அதிக நேரத்தைச் செலவிடுகிறோம். நம்மால் சில விஷயங்களைச் சரி செய்யவோ தீர்க்கவோ முடியாது. மேலும், அவ்வாறு செய்ய முயலும்போது அது இன்னும் சிக்கலாகும். இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு புதிய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இளமைப்பருவத்தில் இது மிக முக்கியமானது. உயர்கல்வியை முடித்து, வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் இணைந்து, அதில் அழுத்தமாகக் கால் ஊன்றிய பிறகு திருமணம் செய்துகொண்டு புது வாழ்வை ஆரம்பிக்கும் பருவம் இதுதான். இந்தப் பருவத்தில் பல விஷயங்களில் அவர்கள் தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும். அவற்றில் சில இங்கே:

- ‘எனக்குத் திறமை இருக்கிறது. அதனால் படிப்புத் தேவையில்லை’ என்று அலட்சியம் காட்டாதீர்கள். திறமையைத் தாண்டிக் கல்வித்தகுதியே உங்களுக்கான



# இளம் வயதில் இவையெல்லாம் முக்கியம்!

வேலை மற்றும் சம்பளம் போன்ற பல விஷயங்களைத் தீர்மானிக்கிறது.



● முதன்முதலில் வேலையில் சேர்ந்த மாதத்திலிருந்தே எதிர்காலத்துக்காக என்று சேமிக்கத் தொடங்கிவிடுங்கள். எவ்வளவு சேமிக்கிறீர்கள் முக்கியமில்லை, அந்த மனநிலையை அடைவதுதான் முக்கியம். சேமிப்பு, முதலீடு இரண்டையும் பழகினால், அதன்பிறகு வீண் செலவுகளைத் தவிர்த்துவிடுவீர்கள். சம்பளம் உயரும்போது செலவுகளை அதிகரிக்காதீர்கள், சேமிப்பை அதிகமாக்குங்கள்.

● ஒவ்வொரு மாதமும் சம்பளத் தேதியை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அளவுக்குச் செலவுகளை அதிகரித்துக்கொள்ளாதீர்கள். இன்றைய கார்ப்பரேட் உலகில் எதுவுமே நிச்சயமில்லை. கையில் சேமிப்பு இருந்தால், அது உங்களைக் காப்பாற்றும்.

● நிறைய பொருட்களை மாதத் தவணையில் வாங்கிவிட்டுச் சிரமப்படாதீர்கள். முன்பு போல் இல்லாமல் இன்று கடன் சுலபமாகக் கிடைக்கிறது. அதனால் பலரும் வேலையில் சேர்ந்த உடனேயே செல்போன், வாகனம், கம்ப்யூட்டர் என்று எல்லாவற்றையும் மாதத் தவணையில் வாங்கிவிடுகிறார்கள். சம்பளம் வந்ததும் தவணைகள் கட்டவே சரியாகப் போகிறது. இந்த வாழ்க்கைமுறை தவறு. உங்கள் சம்பளத்தில் 40% அளவு தாண்டி மாதத் தவணைகளுக்குப் போகக்கூடாது. அந்தக் கடனும் வீடு, வாகனம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்காக வாங்கியதாக இருக்க வேண்டும்.

● பாக்கெட்டில் கிரெடிட் கார்டு இருந்தால், எதை வேண்டுமானாலும் வாங்கத் தோன்றும். விலையைப் பற்றிய கவனம் இருக்காது. அந்த கிரெடிட் கார்டுக்குச் செலவழிப்பதும் உங்கள் பணம்தான் என்ற கவனம் இருக்கட்டும். ஒரு கிரெடிட் கார்டுக்கு மேல் எப்போதும் வைத்திருக்காதீர்கள். அப்புறம் செலவுக் கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும்.

● 'பர்சனல் லோன் வேண்டுமா?' என்று கேட்டுத் தினமும் ஒரு போன் அழைப்பாவது பலருக்கும் வந்துவிடும். பர்சனல் லோனுக்கு வட்டி அதிகம். வாங்கிவிட்டு அவதிப்படாதீர்கள். அப்படிக் கடன் வாங்கி சமாளிக்க வேண்டிய நெருக்கடி வலைக்குள் எப்போதும் விழாதீர்கள்.

● சிலருக்கு ஒரு குறிப்பிட்ட வயதில், 'தொடர்ந்து வேலை பார்ப்பதா? அல்லது சொந்தக்காலில் நின்று தொழில் செய்யலாமா?' என்ற குழப்பம் வரும். வேலையில் இருந்தபடியே தொழிலில் இன்னொரு கால் வைக்காதீர்கள். தொழிலில் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தால், வேலையைத் துறந்துவிட்டுத் தொழிலில் இறங்குங்கள். இல்லாவிட்டால், சலனமின்றி வேலையைத் தொடருங்கள்.

● உங்களின் எதிர்காலத் திட்டம் பற்றி, நம்பிக்கையான மனிதர்களிடம் மட்டுமே பகிர்ந்துகொள்ளுங்கள். அலுவலகத்தில் யார் யாருடனோ அதைப் பற்றிப் பேசினால், அது உங்களுக்கு எதிராகவே திரும்பும் அபாயம் இருக்கிறது.

● அலுவலகத்தில், உறவு வட்டத்தில், நண்பர்கள் மத்தியில் எல்லோருடனும் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ளாதீர்கள். பல நேரங்களில் அது மனக்கசப்புகளையும் ஏமாற்றங்களையும் ஏற்படுத்திவிடும்.

● வேலையில் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்காதீர்கள், உங்கள் மீதான நம்பகத்தன்மை போய்விடும். ஒரே இடத்தில் ஒரே வேலையில் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் இருக்காதீர்கள், 'நம்மால் வளர முடியும்' என்ற உங்களின் தன்னம்பிக்கை போய்விடும்.

● 'நான் சொல்வதுதான் சரி' என்று எப்போதும் வாதிடாதீர்கள். அடுத்தவர் நிலையிலிருந்து எதையும் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

● குடிப்பது, புகைப்பிடிப்பது, பெண்களைக் கேலி செய்வது என்று இருக்கும் ஒருவன் சினிமாவில் வேண்டுமானால்ஹீரோவாகஇருக்கலாம்.நிஜவாழ்க்கையில் வில்லனாகவே பார்ப்பார்கள். அப்படிப்பட்ட பழக்கங்களைத் தவிர்த்துவிடுங்கள். ●



# இளமைக்காலத்துக்கான டாப் 10 மந்திரங்கள்!

1. தவறுகள் செய்யுங்கள். ‘இதைச் செய்தால் சரியாக வருமா, தப்பாகிவிடுமா’ என்று தயங்காதீர்கள். செயலில் இறங்குங்கள். ஒருவேளை தவறாகிப் போனாலும், அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். இதன்மூலம்தான் நீங்கள் அனுபவங்களைச் சேகரிக்க முடியும். ஆனால், ஒருமுறை செய்த தவறை இன்னொரு முறை செய்யாதீர்கள். ஒருவேளை உங்களால் சமாளிக்க முடியாத அளவுக்கு நிலைமை போனால், மூத்தோர்களின் ஆலோசனை கேளுங்கள்.

2. மனதில் உயர்வான எண்ணங்களை வைத்திருங்கள். சுயமரியாதையை இழக்கும்விதமான எந்தச் செயலையும் செய்யாதீர்கள். எதையும் துணிச்சலாகச் செய்யுங்கள். எல்லோரிடமும் அன்பு காட்டுங்கள். எல்லாவற்றுக்காகவும் நன்றியுடன் இருங்கள். எவரையும் கருணையுடன் அணுகுங்கள்.

3. எதிர்மறை உணர்வுகளைத் துரத்துங்கள். உங்களை வெறுக்கும் மனிதர்கள் மீதுகூட வெறுப்பு காட்டாதீர்கள். மனதில் ஈகோ குடியேற அனுமதிக்காதீர்கள். சுயநல உணர்வு இருந்தால், அது உங்கள் வளர்ச்சியைத் தடுத்துவிடும்.

4. எப்போதும் கற்றலை நிறுத்தாதீர்கள். புதிய திறன்களை, தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். திறமையாக உழைக்கவும், பணத்தை நிர்வாகம் செய்யவும், நன்கு பேசவும், தோற்றத்தை நேர்த்தியாக வைத்திருக்கவும், மனிதர்களைக் கையாளவும் கற்றுக்கொள்ளுங்கள்.

5. சரியான எதிர்காலத்தைத் தேர்வு செய்யுங்கள். வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் இதுதான் என் இலக்கு என்று புத்திசாலித்தனமாக முடிவு செய்யுங்கள். நடைமுறைக்குச் சாத்தியமில்லாத எதையும் கனவு காணாதீர்கள். அதேபோல, உங்கள் திறமையைக் குறைத்து மதிப்பிட்டுச் சுருக்கிக்கொள்ளாதீர்கள்.

6. வேலைப்பளு காரணமாக கடுமையான மன அழுத்தம் ஏற்படலாம். பல நெருக்கடிகள் மனதை நொறுக்கலாம். நேசிப்பவர்களின் நிராகரிப்புகள் மன வலியை ஏற்படுத்தலாம். நண்பர்கள் வற்புறுத்தலாம். சூழல் எப்படியும் மாறலாம். ஆனால், எந்தக் காரணத்துக்காகவும் எவ்வித போதைக்கும் அடிமை ஆகாதீர்கள்.

7. நீங்கள் எப்படிப்பட்ட மனிதர்களுடன் அதிக நேரம் செலவிடுகிறீர்களோ, அவர்களின் கலவையாகவே நீங்கள் மாறுகிறீர்கள். பரந்த மனம் கொண்ட, எல்லோரையும் சமமாக மதிக்கத் தெரிந்த, எவரிடமும் குறையாத அன்பைக் காட்டுகிற, தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிற, புதிதாகக் கற்றுத் தருகிற நல்ல மனிதர்களுடன் பழகுங்கள்.

8. சில சூழல்களில் ‘முடியாது’ என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கிற நண்பர்களுக்கு ‘நோ’ சொல்லுங்கள். உங்கள் தகுதிக்குக் குறைவான செயல்களைச் செய்யாமல் தவிர்த்துவிடுங்கள். தங்கள் தேவைக்காக உங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் மனிதர்களிடமிருந்து விலகி இருங்கள்.

9. உங்கள் அன்பைச் சரியான மனிதர்களிடம் செலுத்துங்கள். யாரோ ஒருவரை நீங்கள் நேசிப்பதும், யாரோ ஒருவர் உங்களை நேசிப்பதும் இரண்டு வேறு வேறு விஷயங்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். யாரோ உங்களை நிராகரித்தால், அவர்களின் உணர்வுகளை மதித்து விலகுங்கள். ‘இவர் இல்லாவிட்டால் எனக்கு வாழ்க்கை இல்லை’ என்பது போல நினைக்காதீர்கள். அன்பு இந்த உலகில் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கிறது.

10. வேலை அல்லது தொழிலே உங்களின் பெரும்பகுதி நேரத்தை ஆக்கிரமிக்கலாம். ஆனாலும் குடும்பத்துக்கு நேரம் ஒதுக்குங்கள். குடும்பத்தில் மூத்தவர்களிடம் சில நிமிடங்களாவது அக்கறையாக உரையாடுங்கள். மற்றவர்களுடன் நேரம் செலவிடவும் தவறாதீர்கள். ●




# சுப நிகழ்வுகளில் பட்டு வேட்டி ஏன் கட்ட வேண்டும்?

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் தேதியிலிருந்து ஏழாம் தேதி வரை 'வேட்டி வாரம்' கொண்டாடுவதன் மூலம், நம் பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். நமது பண்பாட்டு அடையாளமாகத் திகழும் வேட்டியை, அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்கும் புனிதமான பணியை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் செய்து வருகிறது. நம் சூழலுக்கு இதமான, நம் உடல்நலனுக்கு உகந்த தூய பருத்தியில் உருவான வேட்டிகள் போலவே, தூய்மையான பட்டில் நெய்யப்பட்ட வேட்டிகளையும் ராம்ராஜ் நிறுவனம் அளிக்கிறது. சுப நிகழ்வுகள் அனைத்திலும் அணிய ஏற்றவை இந்த ராம்ராஜ் lagnaa தூய பட்டு வேட்டிகள், ஷர்ட்டுகள்.

சுப நிகழ்வுகளுக்குப் பட்டு வேட்டியும் ஷர்ட்டும் அணிய வேண்டும் என்பது ஏன் மரபாக உள்ளது? நம் முன்னோர்கள் இதை விளக்குகிறார்கள்.

பிரபஞ்ச சக்தி மற்றும் மின்காந்த சக்தியை ஈர்த்து மற்றும் சேமித்து வைக்கின்ற திறன் தூய பட்டாடைகளுக்கு மட்டுமே உண்டு. மேலும் தூய பட்டாடைகளை நம் உடலில் அணியும்போது ஒருவித மின்தூண்டல் உருவாகிறது. இதனால் தூய பட்டாடைகளை உடுத்துபவர்களுக்கு உடல் மற்றும் மனரீதியாக உற்சாகம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

கோயில் குடமுழுக்கு நடைபெறும்போது செய்யப்படும் யாகங்கள், மந்திர உச்சாடனங்கள், பக்தர்கள் மீது தெளிக்கப்படும் கலசதீர்த்தம் போன்றவை அதிக இறைசக்தியைக் கொண்டவை. அவ்வேளைகளில் நாம் உடுத்தும் தூய பட்டாடைகள், பிரபஞ்ச இறைசக்தியை ஈர்த்து நமக்கு அளிக்கின்றன.

எனவேதான், திருமண நிகழ்வுகளில் மணமகன் தூய்மையான பட்டு வேட்டியும் மணமகள் பட்டுப் புடவையும் அணிவது நம் நாட்டில் பாரம்பரியமாக உள்ளது. தூய்மையான ராம்ராஜ் பட்டு வேட்டி, நல்ல எண்ணங்களைப் பிரதிபலிக்கும். உற்றார் உறவினர்களின் வாழ்த்துகளை வசீகரிக்கும். பிரபஞ்ச ஆற்றலைச் சேமிக்கும் கலாச்சாரக் களஞ்சியமாகப் பட்டு வேட்டி நம்பப்படுகிறது. இதன் காரணமாகவே திருமணம் போன்ற சுபநிகழ்வுகள், பூஜைகள், ஹோமங்கள், கோவில் குடமுழுக்கு மற்றும் ஆலய வழிபாடுகளில் தூய்மையான பட்டு வேட்டி (PURE SILK) பிரதானமாக அணியப்படுகிறது.

எனவேதான், இன்றைய தலைமுறைக்கும் பாரம்பரிய தூய பட்டு வேட்டி சட்டைகளைக் கொண்டு சேர்க்கும் முயற்சியில் ராம்ராஜ் நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளது. இன்றைய இளைஞர்கள் பலருக்கு வேட்டி கட்டத் தெரியாததால், தூய பட்டு வேட்டியிலும் பாக்கெட் மற்றும் ஒட்டிக்கொள்ளும் வெல்க்ரோ வசதிகளைத் தந்துள்ளது ராம்ராஜ்.

நம் கலாச்சாரத்தைக் காத்து வரும் ராம்ராஜ் நிறுவனத்தின் ஒரு தெய்வீகப் படைப்புதான்... ராம்ராஜ் lagnaa தூய பட்டு வேட்டிகள், ஷர்ட்டுகள். இது மங்களம் நல்கும் சுப நிகழ்ச்சிகளின் அடையாளம். தூய பட்டு என்பதற்கு உத்தரவாதமாக சில்க் மார்க் முத்திரை கொண்டது.





## இளமைப் பாடங்கள்!

- வாழ்க்கையில் உங்கள் வேலை அல்லது தொழிலை எப்போதும் முக்கியமாகக் கருதுங்கள். வாழ்வில் மற்ற விஷயங்கள் உங்களுக்காகக் காத்திருக்கும். ஆனால், உங்கள் கெரியர் காத்திருக்காது.
- பெரிய விஷயங்களை அடைவதற்குக் கனவு காணுங்கள். அப்போதுதான், ‘நாம் மற்றவர்களைப் போல சாதாரண விஷயங்களைச் செய்வதற்காக வாழவில்லை’ என்ற உணர்வு வரும். அது சாதிக்கத் தூண்டும்.
- உங்கள் நண்பர்களிடம் இருக்கும் பல பொருட்கள் உங்களிடம் இல்லாமல் போகலாம். அது இயல்புதான் என்பதை உணருங்கள்.
- அடுத்தவர்களின் தவறுகளுக்காக உங்களை நீங்கள் வருத்திக்கொள்ளாதீர்கள். உங்களை நீங்கள் மதிப்புடன் நடத்துங்கள். மற்றவர்களும் அப்படி நடத்த ஆரம்பிப்பார்கள்.
- தோற்றத்திலும் உடல்நலனிலும் அதிக அக்கறை காட்டுங்கள். உங்களிடம் மிகச்சிறந்த உடைகள் இல்லாமல் போகலாம். ஆனால், தூய்மையான உடைகளை நேர்த்தியாக உடுத்துங்கள். எதற்காகவும் எவருக்காகவும் உங்கள் உடலை வருத்திக்கொள்ளாதீர்கள்.



## தேடலை மறக்காதீர்கள்!

இளமைக் காலத்தில் எவரிடமும் இருக்கும் இயல்பான குணம், தேடல்! ‘இளங்கன்று பயமறியாது’ என்பார்கள். அச்சமின்றி அந்த வயதில் தேடலை நிகழ்த்துங்கள். வாழ்வில் எல்லா நல்ல விஷயங்களும் தாமாகவே நம்மிடம் வந்து அடைக்கலமாகிவிடாது. நாம்தான் தேடி அடைய வேண்டும். உங்களுக்கு ஆர்வம் இருக்கும் எல்லா விஷயங்களையும் முயற்சி செய்து பாருங்கள். எது உங்களுக்கு நன்றாக வருகிறது என்பதை உணர்ந்துகொள்ள இது உதவும். இதுவரை உங்களுக்கு இருந்த அடையாளத்தை மாற்றி, ஒரு புதிய அடையாளத்தை இந்தத் தேடல் கொடுக்கும்.

இந்தச் சமூகம் ஒவ்வொருவரையும் ‘இவர் இப்படித்தான்’ என்று குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள் அடக்கிவிடும். அதைத் தாண்டி வித்தியாசம் காட்டும் மனிதர்களே, புதிய செயல்களைச் சாதிக்கிறார்கள். இந்த வித்தியாசம்தான் அழகு. இப்படி இருப்பது மற்றவர்களின் பார்வையில் விநோதமாகத் தெரியும். அதனால் விமர்சனங்களுக்கு ஆளாகலாம். ஆனால், உங்கள் கடின உழைப்பு அதை மாற்றும்.

## வழியை அறியுங்கள்!

எல்லா இளைஞர்களையும் போலவே, உங்களுக்கும் பணம் சம்பாதிக்கும் ஆசை இருக்கும். கனவுகளை நனவாக்கும் எண்ணம் இருக்கும். விரும்பிய வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற விருப்பம் இருக்கும். ஆனால், எல்லா இளைஞர்களையும் போலவே ‘இவற்றை அடையும் வழி என்ன?’ என்பது தெரியாமல் இருப்பீர்கள்.

ஒரே வழிதான் இருக்கிறது. உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள். பிறகு அதை விற்பனை செய்யுங்கள். பில் கேட்ஸ் தனது திறமையால் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்களை உருவாக்கினார். பிறகு அவற்றை விற்பனை செய்து உலகின் நம்பர் 1 பணக்காரர் ஆனார். மகேந்திர சிங் தோனி கிரிக்கெட்டை வித்தியாசமாக விளையாடும் திறமையை வளர்த்துக்கொண்டார். பின் தன் திறமையை விற்று, இந்தியாவில் அதிகம் கொண்டாடப்படும் கிரிக்கெட் வீரர் ஆனார். நீங்களும் திறமையை சீக்கிரம் வளர்த்து, அதைக் கச்சிதமாக விற்பனை செய்யுங்கள்.

நீங்கள் ஒரு கம்ப்யூட்டர் எஞ்சினியர் என்றால், அதில் மற்றவர்களைத் தாண்டி உங்கள் திறமையை வளர்த்துக்கொண்டு வேலை தேடுங்கள். நீங்கள் ஒரு தொழில் தொடங்குவது என்றால், அதன் நுணுக்கங்களைத் திறமையாகக் கற்றுக்கொண்டு செயலில் இறங்குங்கள். எல்லோருக்கும் இந்த விதி பொருந்தும்.





## இனிப்பும் கசப்புமான உண்மைகள்!

- வாழ்வில் யாரையும் சார்ந்திருக்காதீர்கள். யாரும் உங்களுடன் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. இன்றைய நண்பர், நாளைய எதிரியாகக்கூட ஆகலாம்.
- உங்கள் தேவைகள், ஆசைகளை ரகசியமாக வைத்திருங்கள். உங்கள் ரகசியங்கள் எல்லாமே துப்பாக்கியின் புல்லட் போன்றவை. அவற்றை யார் கையிலும் கொடுத்துவிடாதீர்கள். பிறகு அவற்றை உங்களுக்கு எதிராகவே பயன்படுத்துவார்கள்.
- உங்களிடம் அன்பாகப் பேசும் எல்லோரும் உங்களை நேசிப்பவர்களும் அல்ல, நீண்ட காலம் பேசாமல் இருப்பவர்கள் உங்களை வெறுப்பவரும் அல்ல. சூழல் எல்லோரையும் மாற்றும்.
- மற்றவர்கள் பரிகாசம் செய்தாலும், இசை கற்பது, ஓவியம் வரைவது என்பது போன்ற உங்களின் ரசனையான பொழுதுபோக்கை நிறுத்தாதீர்கள். அது உங்களுக்குத் தரும் தன்னம்பிக்கை பெரியது.
- மகிழ்ச்சியை உங்கள் மனதில் தேடுங்கள், அடுத்தவர்களிடம் தேடி ஏமாந்து போகாதீர்கள்.

## அவர்களின் சாய்ஸ் எது?



பெண்களுக்கான ஃபேஷன் பொருட்கள் விற்கும் கடை ஒன்று இருந்தது. நடுத்தர வயது அம்மா ஒருவர் கடைக்குள் வந்தார். “இந்த ஹேர் க்ளிப் நேத்து வாங்கினது. வேற மாற்றித் தர முடியுமா?” என்று கேட்டார். “ஏங்க, இது உடைஞ்சிருக்கா? இல்ல, வேற ஏதாவது பிரச்னையா?” என்று கடைக்காரர் கேட்டார்.

“இந்தக் காலத்துப் பெண்களுக்கு அம்மா வாங்கிக் கொடுக்கறது பிடிக்க மாட்டேங்குது. பரிசுன்னு வாங்கிப் போய்க் கொடுத்தாலும், ‘எங்களுக்குப் பிடிக்கலை’ன்னு முகத்துல அடிச்ச மாதிரி சொல்லிடறாங்க. அவளுக்குப் பிடிச்ச கலர்ல வேற கேட்கிறா” என்றார் அந்த அம்மா. கடைக்காரரும், “நீங்க சொல்றது சரிதான்” என்று அதை வாங்கிக்கொண்டார்.

வேறொரு வீடு. கல்லூரி படிக்கும் மகன் பிறந்த நாளைப் பெற்றோர் கொண்டாடினர். அப்பா அவனை வாசலுக்கு அழைத்துப் போய், “இதைப் பாரு! உனக்காக சர்ப்ரைஸ் பரிசு வாங்கியிருக்கேன்” என்று அங்கு நின்றிருக்கும் இருசக்கர வாகனத்தைக் காட்டினார். மகன் அதைப் பார்த்ததும் மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாகச் சோகமாகிவிட்டான். “என் ஃபிரண்ட்ஸ் எல்லோரும் ஸ்டைலா பைக் வச்சிருக்காங்க. எனக்கு இப்படி வாங்கியிருக்கீங்களே?” என்று கோபமாகக் கேட்டான். “நம்ம பட்ஜெட்ல இதுதான் வாங்க முடிஞ்சது” என்று தயக்கமாக அப்பா சொல்ல, “இதை ஓட்டிட்டுப் போனா என் ஃபிரண்ட்ஸ் கிண்டல் பண்ணுவாங்க. எனக்கு இது வேண்டாம்” என்று அவன் போய்விட, அப்பாவும் அம்மாவும் திகைத்து நின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையில் பலர் தங்களின் பெற்றோரைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். அவர்களின் உழைப்பை, கஷ்டத்தை, நேரத்தை அலட்சியம் செய்கின்றனர். அவர்களின் முடிவுகளை மதிப்பதில்லை. அவர்களின் முடிவுகள் தவறாக இருக்கலாம். அதற்குக் காரணங்கள் இருக்கும். ஆனால், பிள்ளைகளுக்குக் கெடுதல் செய்ய அவர்கள் நினைப்பதில்லை. அதை உணர வேண்டும்.


# டீன் ஏஜ்: குழப்பங்களும் தீர்வுகளும்!



பாசம் கொட்டி வளர்த்த பிள்ளைகள், பதின்பருவத்தை எட்டும்போது கொஞ்சம் அடம் பிடிப்பார்கள். பெற்றோரிடமிருந்து விலகிச் செல்வார்கள். இதனால் கவலை அடைந்து அவர்களைக் கண்காணிப்பார்கள் பெற்றோர்கள். இதனால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இடைவெளி அதிகரிக்கிறது. பெற்றோரையே ஒதுக்கும் அளவிற்குப் பிள்ளைகள் செல்வார்கள்.

‘தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளைகளிடம் தோழமை உணர்வோடு நடந்து கொள்ளவேண்டும்’ என்கின்றனர் உளவியல் நிபுணர்கள். நம் அன்பும் ஆதரவும் அவர்களுக்குச் சுதந்திரமான உணர்வை ஏற்படுத்த வேண்டும், அதே சமயம் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் அவர்கள் இருக்குமாறு நடந்துகொள்ள வேண்டும். டீன் ஏஜ் பிள்ளைகளிடம் கோபம் காட்டுவதைவிட அன்பாக நடந்து கொள்ளுங்கள்.

அந்த வயதில் நிகழும் இயல்பான ஹார்மோன் மாற்றங்களே அவர்களின் குழப்பங்களுக்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவர்கள் மனதில் பலவிதமான கேள்விகள் உருவாகும். ‘இதுதான் சரி’ என யாராவது சொன்னால் ‘அது எப்படி சரி என நீங்கள் சொல்லலாம்?’ என்று எதிர் விவாதம் செய்ய மனம் தயாராக இருக்கும். ஒருவரை ‘நல்லவர்’ என்று அடையாளம் காட்டினால், அதை அப்படியே மறுக்க அவர்கள் மனம் துடிதுடிக்கும். “உன் மாமா வந்திருக்கார் பாரு” என்று உறவைச் சொல்லி மரியாதை கொடுக்கச் சொன்னாலும் “உங்களுக்கு அவர் அண்ணனா இருக்கலாம். எனக்கு மரியாதை தராத அவரை நான் மதிக்க மாட்டேன்” என்று உறவுகளைக்கூட ஒதுக்கிவைக்கும் மனநிலை இந்தப் பருவத்தில் உருவாகும். ‘நான்’ என்கிற உணர்வு மேலோங்கி இருப்பதால் எவரையும் அலட்சியப்படுத்தும் எண்ணம் இவர்களிடம் வெளிப்படும்.





வீட்டில் தங்களது சுதந்திரத்துக்கு முதல் தடையாக இருப்பது அப்பாதான் என்று பெரும்பாலான டீன் ஏஜ் பருவத்தினர் புலம்புவார்கள். அப்பா எதைச் செய்தாலும் அதற்கு ‘ஆமாம் சாமி’ போடுகிறவர்தான் அம்மா என்று அம்மாவைக் கிண்டலடிப்பார்கள்.

தான் நினைத்தது உடனே நடக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதால், தனது விருப்பத்திற்குத் தடையாக நிற்பவர்களை எதிர்க்கவும், அவர்களோடு சண்டையிடவும் தயார் நிலையில் இருப்பார்கள். மனதிற்குள் தேவையில்லாதவற்றை நினைத்து குழம்பும்நிலை இந்த டீன் ஏஜ் பருவத்தில் உருவாகும். ‘என்னை வீட்டில் ஒருவரும் மதிப்பதில்லை’ என்று புலம்பித் தனது தாழ்வு மனப்பான்மையை வெளிப்படுத்தும் டீன் ஏஜ் பருவத்தினரும் உண்டு. இதனால் சில நேரங்களில் விரக்தியான மனநிலையோடு இருப்பார்கள். தங்களைத் தாங்களே வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு மன அழுத்தத்தோடு சில வேளைகளில் காணப்படுவார்கள்.

அதே நேரத்தில், தன் தோற்றத்தை அழகாகக் காட்ட வேண்டும் என்ற அக்கறையும் இந்த வயதில் அவர்களுக்கு அதிகம் வரும். குறிப்பாக தனது தலைமுடியை அழகுபடுத்துவதற்கும், முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள், பருக்கள், பளபளப்பற்ற தன்மை போன்றவற்றை நீக்குவதற்கும் இவர்கள் அதிக நேரத்தைச் செலவழிப்பார்கள்.





கண்ணாடி முன்நின்று தனது முகத்தைப் பார்த்து அதிக நேரம் ரசிப்பார்கள்.

தனக்கு இருக்கும் குழப்பங்களையும், தான் சந்திக்கும் போட்டிகள் நிறைந்த சூழலையும் பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கும். தன்னை பற்றித் தனக்கிருக்கும் பெருமித உணர்வு மற்றவர்களுக்கு எட்ட வேண்டும் என்பதும், தனது பெரிய நண்பர்கள் வட்டத்தைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைய வேண்டும் என்பதும் அவர்களின் விருப்பம்.

அவர்களுக்குச் சுயக் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம், அற உணர்வைச் சொல்லித் தந்து வளர்க்கும் குடும்பம், கனவுகளை நெறிப்படுத்தும் ஆசிரியர்கள் ஆகியோர் தேவை. இதை உணர்ந்துகொண்டு அவர்களை அணுகுங்கள்.

என்னதான் உங்கள் குழந்தைகள் என்றாலும், அவர்களின் அந்தரங்கத்திற்கு மதிப்பளியுங்கள். அவர்களின் பொருட்களை அவர்களுக்குத் தெரியாமல் ஆராயாதீர்கள். ஆங்காங்கே ஆள் வைத்து துப்பறிவது, குழந்தைகளின் புத்தகப்பை, ஷெல்ப், செல்போன் போன்றவற்றைச் சோதிப்பது போன்றவற்றைத் தவிருங்கள். சுதந்திரமாக விடுங்கள். நம் பிள்ளைகளின் மீது முதலில் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் அவர்களுக்கான உடைகளை அவர்களையே தேர்வு செய்ய விடுங்கள். ஸ்டைலாக ஹேர் கட் செய்துகொள்ள விரும்பினால் அனுமதியுங்கள். ஏனெனில் அதற்கான விமர்சனத்தை அவர்களே அனுபவிக்கட்டும், அப்புறம் உங்கள் வழிக்கு வருவார்கள். அவர்களின் நடை, உடை, பாவனையை வைத்து அவர்களைத் தவறாக எடை போட வேண்டாம். உங்களைக் கேட்காமல் ஊர் சுற்றிவிட்டு வந்ததற்காக வீட்டுக்கு வெளியில் நிற்க வைத்து கத்த வேண்டாம். மற்ற பிள்ளைகளுடன் ஒப்பிட்டு அவமானப்படுத்த வேண்டாம்.

அவர்களின் பிரச்னைகளையும், குழப்பங்களையும் அவர்கள் அனுமதியின்றி யாரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். பதின்பருவம் என்பது குழப்பமான பருவம். இந்தப் பருவத்தில் சுதந்திரமும் வேண்டும், அதே சமயம் பெற்றோரின் அன்பும் வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். எனவே அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.

அவர்கள் உங்களிடம் பேச வரும்போது அவர்கள் கூறுவதைக் கேளுங்கள். மனம்விட்டுப் பேசுங்கள். உங்களுடைய டீன் ஏஜ் பிள்ளைகளிடம் நண்பனைப் போல நடந்துகொண்டால், தங்களுடைய பிரச்னைகளையும் கேள்விகளையும் உங்களிடம் கொட்டித் தீர்ப்பார்கள். அவர்கள் தலை சாய்ந்துகொள்ள உங்கள் தோளைக் கொடுங்கள். டீன் ஏஜ் பருவத்தில் தேடலும், கேள்விகளும், குழப்பமும், பக்குவமின்மையுடன் கலந்து வெளிப்படும். எவ்வளவு மாற்றம் வந்தாலும், அவர்களின் நேர்மையையும், உயர் நோக்கத்தையும் சந்தேகிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது அவர்களைப் புண்படுத்தும்.


டீன் ஏஜ் பருவத்தினரிடம் அதிக கவனம் செலுத்துவதற்குப் பெற்றோர்கள் நேரம் ஒதுக்க வேண்டும். அடுத்தவர்களிடம் அன்பு பாராட்டுவது, முரண்பாடுகளைச் சகித்துக்கொண்டு வாழ்வது, பிறருடன் பேசிப் பழகுவது, நண்பர்களை அடையாளம் காண்பது, உண்மையைப் பேசி உறவாடுவது, மற்றவர்களின் அங்கீகாரம் பெறுவது, மன அழுத்தத்தைக் கையாள்வது, கல்லூரி மற்றும் பணியிடத்தில் பிரச்னைகளை எதிர்கொள்வது, பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவது என எல்லாவற்றுக்கும் வழிகாட்டுங்கள். இப்படித்தான் அவர்களது மனக்குழப்பங்களைப் பெற்றோரால் தீர்த்துவைக்க இயலும்.

குடும்ப விஷயங்களில் அவர்களின் கருத்தைக் கேளுங்கள். அவர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளியுங்கள். இது அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும். அதேபோல, அவர்கள் நல்ல விஷயங்கள் செய்யும்போது மனம்திறந்து பாராட்டுங்கள். மற்றவர்களின் பாராட்டுக்கும் அங்கீகாரத்துக்கும் அவர்களின் மனம் ஏங்கும். பெற்றோரும், மற்றவர்களும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் பாராட்டுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ●

# தேவை... விருப்பம்... பண வித்தியாசம் பழக்குங்கள்!

“என் பசங்களுக்கு இப்ப 25 வயசும், 20 வயசும் ஆகுது. அவங்க சின்னவங்களா இருந்தப்ப, மாசம் ஒரு தொகையைக் கொடுத்து, கொஞ்சம் பணத்தைச் சேமிக்கவும், கொஞ்ச பணத்தைச் செலவழிக்கவும், மீதியை ஏதாவது நல்ல காரியங்களுக்குக் கொடுக்கவும் சொல்வேன். அவங்க எல்லாத்தையும் செலவழிச்சிடுவாங்க. இப்ப என் மூத்த பையன் வேலைக்குப் போறான். சம்பளம் முழுக்கச் செலவு பண்ணிடறான்... மாறவே இல்லை!” – கவலையுடன் புலம்பினார் ஜானகி.

ஜானகி செய்த தவறு என்ன தெரியுமா? பணத்தைக் கொடுத்துப் பழக்கினாரே தவிர, பணம் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்க பிள்ளைகளுக்கு அவர் கற்றுத் தரவில்லை. பலருக்கும் பணம் என்பது அந்தரங்க விஷயமாகவே இருக்கிறது. நாளுக்கு நாள் எகிறிக் கொண்டிருக்கும் விலைவாசி ஒரு பக்கமிருக்க, ஆடம்பரத்தில் திளைத்துக் கொண்டிருக்கிற நட்சத்திரங்களையும் பிரபலங்களையும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களில் பார்த்து வளரும் டீன் ஏஜ் பிள்ளைகளிடம், பணத்தைப் பற்றிப் பேசுவதைப் போன்ற சிரமமான விஷயம் வேறு இருக்காது.



பணம் என்பது எதற்காக? அதன் மீது நமக்கு ஏன் அவ்வளவு அக்கறை? எப்போது சேமிக்கிறீர்கள்? எப்போது அதிகமாகச் செலவழிக்கிறீர்கள்? எப்போது பணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கிறீர்கள்? எப்போது உங்களுக்காக வைத்துக் கொள்கிறீர்கள்? தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் என்ன வித்தியாசம்? – இவற்றில் எத்தனை கேள்விகள், ஒவ்வொரு குடும்பத்திலும் கேட்கப்படுகின்றன? பதிலளிக்கப்படுகின்றன?

எல்லா விஷயங்களையும் பணத்தோடு தொடர்புபடுத்தியே பேச வேண்டும் என்று அர்த்தமில்லை. முதலில் அடிப்படை விஷயங்களில் இருந்து ஆரம்பியுங்கள். அதாவது பணத்தின் முக்கியத்துவம், எப்படிப் புத்திசாலித்தனமாகச் செலவழிப்பது போன்றவை...

‘பட்ஜெட்’ என்பது இந்த வயதில் அவர்களுக்குப் புரியாது. அதைப் புரிய வைக்க அவர்களிடம் ஒரு தொகையைக் கொடுங்கள். அதை எப்படியெல்லாம் செலவழிக்கலாம் என்று அவர்களிடம் பேசுங்கள். அவர்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான பணம் அது. உதாரணத்துக்கு ஹேர் கட் செய்ய, சினிமாவுக்குச் செல்ல... இப்படி வழக்கமாக அவர்கள் செலவு செய்கிற விஷயங்களுக்காக! அவர்கள் விரும்பினால், அதில் சில செலவுகளைக் குறைத்துக்கொண்டு ஒரு தொகையைச் சேமிக்கலாம். அவர்களுக்கு வாகனம் அல்லது லேப்டாப் வாங்க... இப்படி! அதற்கு முன் அவர்கள் பெயரில் வங்கியில் ஒரு சேமிப்புக்கணக்கை ஆரம்பித்து, அதில் நீங்களும் ஜாயின்ட் அக்கவுன்ட் ஹோல்டராக இருக்கலாம்.

பிள்ளைகளுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய இன்னொரு விஷயம் கடன். குறிப்பாக ‘கடன் அட்டை’ எனப்படுகிற கிரெடிட் கார்டு பற்றி. கிரெடிட் கார்டு உபயோகம் பற்றியும், அதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள், சரியான நேரத்தில் பணத்தைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் சேர்கிற அபராதம் பற்றியும், அதில் வட்டி விகிதம் எப்படிக் கணக்கிடப்படுகிறது என்பது பற்றியும் போதிக்கலாம்.

சேமிக்கவும் பட்ஜெட் போடவும் கற்றுக் கொடுக்கிறீர்கள்... அப்போது அது அவர்களது பணமாகி விடுகிறது. ‘என் பணம்தானே... அப்புறம் அதை என் இஷ்டத்துக்கு நான் ஏன் செலவு பண்ணக்கூடாது?’ என்கிற கேள்வி கட்டாயம் வரும். இந்த இடத்தில்தான் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமான வேறுபாடுகளை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்... ‘வீடு, உணவு, உடை, மருத்துவ வசதி... இவை எல்லாமே நமது அத்தியாவசியத் தேவைகள். தனக்கெனத் தனி பைக், காஸ்ட்லியான செல்போன்... இவையெல்லாம் விருப்பங்கள்.

இந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது டீன் ஏஜ் பிள்ளைகளுக்குச் சற்று சிரமம்தான். அவர்களது பார்வையில் தேவை என்பதும் விருப்பம் என்பதும் கிட்டத்தட்ட ஒன்றுதான். வரவு, செலவு கணக்குகளைக் காட்டிப் பேசுவது ஓரளவு உதவும். உதாரணத்துக்கு உங்கள் வருமான வரி அறிக்கையை அவர்களிடம் காட்டி, சேமிப்பிலும் முதலீட்டிலும் உங்கள் புத்திசாலித்தனம் பற்றிப் புரிய வைக்கலாம்.

உங்களுடைய தவறுகளையே உங்கள் பிள்ளைகளுக்குப் பாடமாகப் போதிக்கலாம். நல்ல கடன்களுக்கும் (உதாரணத்துக்கு வீட்டுக் கடன்), தேவையற்ற கடன்களுக்குமான (உதாரணத்துக்கு அதீத கிரெடிட் கார்டு உபயோகம்) வித்தியாசத்தைப் பற்றிப் பேசலாம். பணம் என்பது நல்லதா, கெட்டதா என்பது அதை நாம் எப்படி உபயோகிக்கிறோம் என்பதைப் பொறுத்தது எனச் சொல்லலாம்.

பிள்ளைகளும் அவர்களது தவறுகளில் இருந்தே பாடம் கற்பார்கள். மாதாந்திர பாக்கெட் மணியை மாதத்தின் நடுவிலேயே செலவழித்து விட்டு, மறுபடி பணம் கேட்டு உங்களிடம் வந்தால் தயங்காமல் ‘முடியாது’ என்று சொல்லுங்கள். தவறின் பாதிப்பை அவர்கள் உணர்ந்தால்தான் அடுத்த முறை அதைச் செய்ய மாட்டார்கள். அதற்காக அவர்களே பட்டு உணர்ந்து கொள்ளட்டும் என எந்நேரமும் அலட்சியமாக இருக்காதீர்கள். தவறு செய்யாதபடி தடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு. சுயமாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டாலே, அதைப் புத்திசாலித்தனமாகச் செலவழிப்பதையும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். பணத்தைச் சேமிக்கவும், அதைச் சரியாக முதலீடு செய்யவும் தேவையான அடிப்படை ஒழுக்கத்தை நீங்கள்தான் அவர்களுக்குள் புகுத்த வேண்டும்.

அதே சமயம், குடும்பத்தின் அதிக செலவுகள் பற்றி அவர்களிடம் புலம்பாதீர்கள். பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் எனப் பேராசையை அவர்களுக்குள் விதைக்காதீர்கள். அவர்களின் ஸ்கூல் ஃபீஸ், யூனிஃபார்ம், மியூசிக் கிளாஸ் ஆகியவற்றுக்கு ஆகும் செலவுகளைச் சொல்லி அவர்களை நோகடிக்காதீர்கள்.

### எந்தெந்த வயதில் பிள்ளைகளிடம் பணம் தொடர்பான எந்தெந்த விஷயங்களைப் பேசலாம்?

**10 வயதில்:** எவ்வளவு செலவழிக்கலாம், எதற்கெல்லாம் செலவழிக்கலாம் என்பது பற்றி...

**12 வயதில்:** பணத்தின் மதிப்பு பற்றி...

**15 வயதில்:** கடன் என்றால் என்ன, அது எப்படிக் கிடைக்கிறது என்பது பற்றி...

**16 வயதில்:** குடும்பச் செலவுகள் பற்றி...

**18 வயதில்:** கிரெடிட் கார்டு மற்றும் அதன் முக்கியத்துவம். தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமான வித்தியாசங்கள். பட்ஜெட், சேமிப்பு மற்றும் முதலீடு பற்றி... ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 7

ஜனவரி 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்
**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்
**வள்ளி**

வடிவமைப்பு
K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
எண். 188, தரை தளம்,
14வது குறுக்குத் தெரு சந்திப்பு,
டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 032.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# இனிய இளமைக்கு 8 வாழ்க்கை விதிகள்!



1. எல்லாவற்றுக்கும் நேரம் இருக்கிறது என நம்புங்கள். நினைத்தபடி மதிப்பெண், விரும்பிய வேலை, எதிர்பார்த்த சம்பளம், வெளிநாட்டு வாய்ப்பு என ஏதோ ஒன்று கிடைக்காமல் போனால், 'எல்லாம் முடிந்துவிட்டது' என்று இடிந்துவிடாதீர்கள். நீங்கள் நேசிக்கும் எதுவும், சற்று தாமதமாகக்கூட உங்களை வந்தடையும். அதற்காக முயற்சி செய்தபடி காத்திருங்கள்.

2. நீங்கள் என்னவாக ஆக வேண்டும் என்பது பற்றி உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. மற்றவர்கள் ஆலோசனை சொல்லலாம். உங்களிடம் இருக்கும் தனித்திறமையைச் சுட்டிக் காட்டலாம். ஆனால், அதையெல்லாம் வைத்து என்ன செய்வது என நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும். திறமையை வைத்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தால் எதுவும் மாறிவிடாது. யாரோ சொல்வதைக் கேட்டு, தவறான கனவைத் துரத்துவதும் சரியாக இருக்காது.

3. ஏதேனும் நெருக்கடி, பிரச்னை அல்லது பின்னடைவு ஏற்படும்போது 'நமக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது' என்று சோர்ந்து போகாதீர்கள். ஏனெனில், எல்லோருக்குமே இப்படி ஆகிறது. மகிழ்ச்சியாக நடமாடுவதாக நாம் கருதும் பெரும்பாலான நபர்களும் இப்படிப்பட்ட பிரச்னைகளை மனதில் சுமந்துகொண்டிருப்பார்கள். எனவே சோர்ந்து உட்காராமல், தீர்வு தேடுவதில் கவனம் செலுத்துங்கள்.

4. உங்கள் வாழ்க்கையில் எது நடந்தாலும், அது பெரும் தடையா அல்லது புது வாய்ப்பா என்பது நீங்கள் பார்க்கும்விதத்தில்தான் இருக்கிறது. எனவே, எதையும் நேர்மறையான கண்ணோட்டத்தில் பார்க்கப் பழகுங்கள். நெருக்கடியைக்கூட வாய்ப்பாக மாற்ற முடியும்.

5. வெற்றிகரமான மனிதர்கள் யாருடைய வாழ்க்கையைப் பார்த்தாலும், கடின உழைப்பும் விடாமுயற்சியுமே அவர்களை இந்த உயரத்துக்குக் கூட்டி வந்திருக்கிறது என்பது புரியும். முதல் ஒரு லட்சம் ரூபாயைச் சம்பாதிக்க மிகவும் போராடிய ஒருவர்தான் இன்று கோடிகளில் வர்த்தகம் செய்வார். கூட்டத்தில் ஒருவராகத் திரையில் வந்தவர்தான் இன்று முன்னணி நடிகராக இருப்பார். இன்று என்னவாக இருந்தாலும், எதிர்காலத்தில் எப்படி வர வேண்டும் என்று இலக்கு வைத்து முயற்சி செய்யுங்கள்.

6. பணம் முக்கியம்தான். ஆனால், அது மட்டுமே வாழ்க்கையின் இலக்காக இருக்க முடியாது. பணம் ஓரளவுக்கே மகிழ்ச்சியைத் தரும். அதைத் தாண்டி இன்பத்தைத் தரும் பல அனுபவங்கள் வாழ்க்கையில் உண்டு. அவற்றைத் தேடி அடையுங்கள். வேலையில், தொழிலில், ஒரு குறிப்பிட்ட சாதனையை அடையும்போது கிடைக்கும் மகிழ்ச்சி தனித்துவமானது. அதை அனுபவியுங்கள்.

7. நாளையோ, எதிர்காலத்திலோ கிடைக்கும் ஏதோ ஒன்றுதான் நமக்கு மகிழ்ச்சி கொடுக்கும் என நினைக்காதீர்கள். இந்தக் கணத்தில் கிடைக்கும் அனுபவங்களை ரசித்து மகிழுங்கள். நாளை வருவதை நாளை பார்த்துக்கொள்ளலாம். அதற்காக இன்றைய மகிழ்ச்சியை இழக்காதீர்கள்.

8. எல்லாம் மாறும். உங்கள் ஆசைகள், கனவுகள், இலக்குகள், தேவைகள் என எல்லாமே காலப்போக்கில் மாறும். உங்கள் பயங்கள், கவலைகளும் மாறும். எல்லாச் சூழல்களுக்கும் மாற்றங்களுக்கும் எப்போதும் தயாராக இருங்கள். ஜன்னலுக்கு வெளியே நகரும் காட்சிகளை ஒரு ரயில் பயணி ரசிப்பது போல வாழ்க்கையை ரசித்து வாழுங்கள். ●

# ராம்ராஜ் காட்டன் பண்பாட்டு சந்திப்பு!




ராம்ராஜ் காட்டன் சார்பில் 'Cultural Connect' என்கிற இரண்டு நாள் பிரமாண்ட நிகழ்வு மகாபலிபுரத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. வழக்கமாக இதுபோன்ற நிகழ்வுகளில் விற்பனையாளர்கள், டீலர்கள் மட்டுமே பங்கேற்பார்கள். ஆனால், இந்த 'Cultural Connect' சந்திப்பிற்குப் புதுமையாக, விற்பனையாளர்கள் மற்றும் டீலர்களின் அடுத்த தலைமுறையினர் மற்றும் புதிதாகத் தொழிலுக்கு வந்தவர்களையும் அழைத்து வருமாறு நிறுவனத்தின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டிருந்தது. ஏனெனில், இது அடுத்த பத்தாண்டுகளுக்கான ரீடெயில் வர்த்தகத்தை வடிவமைப்பதற்கான பயிலரங்காக இருந்தது.

இன்றைய கால மாற்றத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் நம்மை எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்கள் எளிதாகக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும், அதற்குப் பெரும் கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது. ராம்ராஜ் நிறுவனம் தன் விற்பனையாளர்கள், டீலர்கள் மற்றும் அவர்களின் அடுத்தடுத்த தலைமுறையினருக்கு இந்த வழிகாட்டலை இந்நிகழ்வில் தந்தது. தொழில்துறையில் பல சாதனைகளை நிகழ்த்திவரும் ஐந்து தொழில் அறிஞர்களை அழைத்து வந்து, தங்களுடைய தொழிலை மேம்படுத்த என்னென்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்தது. ஏறக்குறைய மூன்றரை மணி நேரம் நடந்த இந்நிகழ்வில் பார்வையாளர்கள் அத்தனை பேரும் கூர்ந்து கவனித்தனர். இதுவே இந்நிகழ்வின் வெற்றி எனலாம்.

நிகழ்வில் ராம்ராஜ் காட்டன் இணை நிர்வாக இயக்குநர் திரு. S.அஸ்வின் அவர்கள் வரவேற்புரையாற்றினார். டாடா க்ரோமா நிறுவனத்தின் தலைமை டிஜிட்டல் அலுவலர் திரு.V.K.ஸ்ரீகாந்த், லைஃப்ஸ்டைல் இன்டர்நேஷனல் ஷோரூம்களின் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு.வசந்த்குமார், ஜோஹோ கார்ப்பரேஷன் இணை நிறுவனர் திரு.குமார் வேம்பு, ஜி.ஆர்.டி ஜுவல்லரி குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திரு.G.R.அனந்தபத்மநாபன், கெவின்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.C.K. ரங்கநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்திய மக்களின் வாங்கும் சக்தி, மாறிவரும் நுகர்வோரின் ரசனைகள், ரீடெயில் வர்த்தகத்தில் தொழில்நுட்பத்தை எப்படிப் பயன்படுத்துவது,


LINEN PARK
SHIRTS•TROUSERS•FABRICS•DHOTIS


RAMRAJ
FINEST FABRICS




RAMRAJ
COTTON DHOTIS


















ராம்ராஜ் காட்டன் ‘Cultural Connect’ நிகழ்வின் இரண்டு நாட்களிலும், பல்வேறு அரங்குகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ராம்ராஜின் ஆயிரக்கணக்கான தயாரிப்புகள் விருந்தினர்களைக் கவர்ந்தன.






அடுத்த தலைமுறையினருக்குத் தலைமைப்பண்பை உருவாக்குவது, பாரம்பரிய ரீடெயில் வர்த்தகத்துக்கும் நவீன வர்த்தகத்துக்கும் இருக்கும் வேறுபாடுகள், நம் பண்பாட்டை விட்டுக்கொடுக்காமல் வளர்ச்சியை அடையும் வழிகள், எதிர்கால விரிவாக்கத்துக்கான பாதை, சவால்களைச் சந்திக்கும் மனநிலையைப் பெறும் வழி என்று அவர்களின் உரைகள் அனுபவ வழிகாட்டுதல்களாக இருந்தன.

இதைத் தொடர்ந்து ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் தலைவருமான திரு.K.R.நாகராஜன் அவர்கள் தலைமையுரையாற்றினார். தொலைக்காட்சி நெறியாளர் திரு.கோபிநாத் அவர்கள் இந்த ஆறு பேரையும் அமரவைத்து, குழு உரையாடல் நிகழ்த்தினார். நிகழ்ச்சியின் நிறைவில் ராம்ராஜ் காட்டன் நிர்வாக இயக்குநர் திரு.B.R.அருண் ஈஸ்வர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.நாகராஜன் தொழில் ஆரம்பித்த நேரத்தில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் இதுபோல் நடந்த ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார். அவர் வேட்டி அணிந்திருந்தார் என்பதற்காக அவருக்கு உள்ளே வர அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது அவர் வெளியில் நின்று ‘இந்த வேட்டியைக் கட்டியதால் என்னை அவமானப்படுத்தினர். இந்த வேட்டிக்கு நான் அங்கீகாரம் பெற்றுத் தருவேன்’ என்று முடிவெடுத்தார். அவரின் உழைப்பால் ராம்ராஜ் காட்டன் உயர்ந்து, வேட்டியை ‘மதிப்பிற்குரியோர்களின்’ உடையாக மாற்றியது.

இந்த நிகழ்வுக்கு அனைவரும் வேட்டி சட்டையில் வர வேண்டும் என டிரஸ் கோட் குறிப்பிடப்பட்டது. 30 வருடங்களுக்கு முன்னால் வேட்டி கட்டிக்கொண்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் போக முடியாது என்று இருந்த நிலையை மாற்றி, தற்போது ‘வேட்டி சட்டை அணிந்து வருபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்’ என்று புதிய வரலாறு படைத்த நிகழ்வாக இது இருந்தது. இது வேட்டிக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றே சொல்லலாம். மகாபலிபுரத்தில் கடற்கரையை ஒட்டிய ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அத்தனை பேரும் வேட்டி அணிந்து வந்தது கண்கொள்ளாக் காட்சி. தமிழர்களின் பாரம்பரியத்திற்குரிய அங்கீகாரமாக இந்த ‘Cultural Connect’ நிகழ்வு அமைந்தது.

## உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



‘உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்’ என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

**சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.**

**போன்:**

**0421–4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# 20 வயதில் இணையற்ற வெற்றி!

**தங்களது சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் வெற்றிகரமான கோடீஸ்வரர்களாக உயர்ந்த பலரும் அந்தப் பயணத்தைத் தங்கள் இளமையில் தொடங்கினார்கள். 20 முதல் 29 வயது வரையிலான அந்தப் பருவத்தில் எதையெல்லாம் செய்தால் இணையற்ற வெற்றி கிடைக்கும். இதோ அவர்களில் சிலர் சொல்லும் ரகசியங்கள்:**




• வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு கனவு இருக்கும். அதை அடைவதற்குத் தொடர்ச்சியாக முயற்சிகளைச் செய்துகொண்டே இருப்பார்கள். இன்று ஃபேஸ்புக் என்பது பிரமாண்ட நிறுவனம். அதை ஆரம்பித்தபோது மார்க் ஸக்கர்பர்க் ஒரு கனவு கண்டார். தன் கல்லூரியில் படிக்கும் சக மாணவர்கள் இணைந்து தொடர்புகொள்ள ஒரு நெட்வொர்க் உருவாக்க வேண்டும் என்பது கனவு. அது நிறைவேறியதும், அதை உலக மக்கள் எல்லோரும் பயன்படுத்தும் தளமாக மாற்ற அவர் கனவு கண்டார். அதற்காக முயற்சி செய்தார். அது அவரை இளம்வயது பில்லியனர் ஆக்கியது.




• தங்களின் எதிர்காலம் குறித்து அவர்களுக்கு ஒரு பார்வை இருக்கும். அதை அடைவதற்கு கற்பனைத்திறனை முழுமையாகப் பயன்படுத்தி யோசிப்பார்கள். அது சுலபமாக நிறைவேறாது என்பது தெரிந்தாலும், அதைச் செய்வதற்கு அயராமல் உழைப்பார்கள். தங்கள் சிந்தனையும் இலக்கும் துருப்பிடித்து உதிர்ந்து போக அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் வித்தியாசமான விஷயங்களைச் செய்து பார்த்தபடி இருப்பார்கள். அமெரிக்காவின் மார்த்தா ஸ்டீவர்ட் அதற்கு உதாரணம். முதலில் மாடலிங் துறையில் இறங்கிய இந்தப் பெண்மணி, பிறகு பங்குச்சந்தை வர்த்தகம் செய்ய ஆரம்பித்தார். அப்போது அமெரிக்கப் பங்குச்சந்தை வர்த்தகத்தில் பெண்கள் அரிதாகவே இருந்தாலும், அவர் தயக்கமின்றி அதில் காலூன்றினார். பிறகு ஹோட்டல் துறையில் தடம் பதித்தார். பெண்களுக்கான ஃபேஷன் பொருட்கள் விற்கும் கடைகள் ஆரம்பித்து, அதிலும் வெற்றி பெற்றார். தனக்கு எதெல்லாம் நன்றாக வருமோ, அதையெல்லாம் செய்து பார்ப்பது இந்த வெற்றி மனிதர்களின் இயல்பு.



• அவர்கள் கற்றுக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் முந்தைய நாளைவிட சற்றே மேம்பட்ட மனிதராக அவர்கள் மாறுவார்கள். அதற்காக எப்படிப்பட்ட தியாகத்துக்கும் தயாராக இருப்பார்கள். இன்று டெலிவிஷன் உலகத்தின் சூப்பர்ஸ்டார் ஓப்ரா வின்ப்ரே. ஆரம்பத்தில் ஐந்து ஆண்டுகள் அவர் ரேடியோ அறிவிப்பாளராக இருந்தார். நான்கைந்து ரேடியோ நிலையங்களில் ஓடி ஓடி உழைத்துக் கற்றுக்கொண்டார். அப்போது அவரை எதிர்காலமே இல்லாத சாதாரண அறிவிப்பாளராகவே கருதினார்கள். ஆனால், தான் கற்றுக்கொண்டதை வைத்து அவர் டெலிவிஷன் ஷோ நடத்தியபோது, அதை அமெரிக்காவே கொண்டாடியது.



● அவர்கள் நம்பிக்கை இழக்க மாட்டார்கள். கடினமாக உழைத்துவிட்டு, பொறுமையுடன் காத்திருப்பார்கள். கராத்தே சண்டை நுட்பங்களை புரூஸ் லீ அளவுக்கு வெளிப்படுத்தியவர் யாரும் கிடையாது. தான் வாழ்ந்த காலத்தில் நிகரற்ற சாம்பியனாக அவர் இருந்தார். கடினமாக உழைத்துக் கற்றுக்கொண்டு, அதை நம்பிக்கையுடன் வெளிப்படுத்திவிட்டு, அவர் பொறுமையுடன் காத்திருந்தார். உலகமே அவரை வியந்து பார்த்தது. 'சுலபமான வாழ்க்கையைக் கேட்டு வேண்டுதல் வைக்காதீர்கள். கடினமான வாழ்க்கையை வாழும் சக்தியைக் கொடு எனக் கடவுளிடம் வேண்டுங்கள்' என்பது அவரது புகழ்மிக்க வாசகம்.



● 'நான் வாழ்க்கையில் என்னவாக ஆக வேண்டும் என நினைத்தேனோ, அதற்குக் கல்லூரிப் படிப்பு எந்த வகையிலும் உதவாது என்று புரிந்தது. அந்தப் படிப்பு எனக்கு மதிப்பானதாகவும் தெரியவில்லை. எனவே, கல்லூரியில் சேர்ந்த ஆறு மாதங்களில் நின்றுவிட்டேன்' என்று ஸ்டீவ் ஜாப்ஸ் சொன்னார். அதன்பிறகு தன் நண்பருடன் இணைந்து ஆப்பிள் கம்ப்யூட்டர் நிறுவனம் தொடங்கி வெற்றிக்கொடி நாட்டினார்.

கூகுள் நிறுவனத்தின் தலைவராக இருந்த எரிக் ஷ்மிட் இவருக்கு அப்படியே நேர் எதிர். கம்ப்யூட்டர் துறையில் உலகின் முன்னணி கல்வி நிறுவனங்களில் பிஹெச்.டி ஆராய்ச்சி வரை முடித்துவிட்டு வேலைக்கு வந்தார். ''எனக்குப் புதிய உலகத்தை அறிமுகம் செய்தது கல்லூரி வாழ்க்கைதான். இந்தப் படிப்புதான் என் கனவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க உதவியாக இருந்தது'' என்றார் அவர். எனவே, ஒருவரின் மனநிலையைப் பொறுத்து அவருக்குப் படிப்பு உதவி செய்கிறது.

● கல்வியைத் தாண்டி தன்னிடம் இருக்கும் தனிப்பட்ட திறமையை அவர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். போதுமான நேரம் ஒதுக்கி அந்த திறமையை வளர்க்கிறார்கள். ஜோனாதன் கூன் என்பவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஃபேஷன் டிசைனர். சாதாரண இருக்கைகள் முதல் கார்களின் இருக்கை வரை பலவற்றை வித்தியாசமாக வடிவமைத்துக் கொடுத்து 16 வயதிலேயே அவர் கோடீஸ்வரர் ஆகிவிட்டார்.





● இளம் வயதில் உடல்வலு நன்றாக இருக்கும் என்பதால், அவர்கள் நீண்ட நேரம் உழைக்கத் தயங்க மாட்டார்கள். வாரத்தில் நூறு மணி நேரம் கூட அவர்கள் சர்வ சாதாரணமாக வேலை பார்ப்பார்கள். தோல்விகள், பின்னடைவுகள் என எல்லாவற்றில் இருந்தும் மீண்டு அவர்கள் வெற்றியை அடைவார்கள். வர்ஜின் விமான நிறுவனத்தின் தலைவர் ரிச்சர்ட் பிரான்சன், "பூஜ்ஜியத்திலிருந்து ஒரு பிசினஸை ஆரம்பித்து ஜெயிக்க வேண்டும் என்றால், வாரம் முழுக்கத் தினமும் 24 மணி நேரம்கூட உழைக்க வேண்டியிருக்கும். கடினமாக உழைத்தால் மட்டுமே, போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் பிழைத்திருக்க முடியும்" என்கிறார்.



● அவர்கள் மாற்றங்களுக்குத் தயங்குவதில்லை. உலகப் புகழ்பெற்ற ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் மரிஸா மேயர் பட்டம் பெற்றபோது, அவருக்கு 14 வேலைவாய்ப்புகள் காத்திருந்தன. அவர் கூகுள் நிறுவனத்தில் சேர்ந்தார். வெறும் 19 பேர் இருந்தபோது அந்த நிறுவனத்தில் சேர்ந்த முதல் பெண் அவர். கூகுளின் பல சேவைகளை உருவாக்கிய அவர், அங்கேயே தேங்கிவிடாமல் ஒரு கட்டத்தில் மாறி யாஹூ நிறுவனத்தின் தலைவர் ஆனார். ●



# தூக்கத்தைத் துரத்தாதீர்கள்!

தொழில்நுட்பக் கருவிகளும் தகவல்தொடர்புச் சாதனங்களும் நம் தூக்க நேரத்தையும் தரத்தையும் மாற்றிவிட்டன. “ஒரு மனிதரின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு, தினமும் குறைந்தபட்சம் 7 மணி நேரத் தூக்கம் அவசியம்” என்கிறார்கள் டாக்டர்கள். ஆனால் நள்ளிரவு வரை கண்விழித்து டி.வி பார்ப்பவர்களுக்கும், போர்வைக்குள் மூடியிருந்தபடி செல்போனில் ‘சாட்’ செய்பவர்களுக்கும் குறைவில்லை. இது காலப்போக்கில் ‘தூக்கம் வராத நோயில்’ போய் முடிகிறது. இளம்வயதில் இதைத் தவிர்க்க என்ன வழி?

● காபி போன்ற பானங்களை அருந்துவதும், சர்க்கரையும் உப்பும் அதிகம் இருக்கும் நொறுக்குத்தீனி அயிட்டங்களைச் சாப்பிடுவதும் உங்கள் தூக்கத்தைக் கெடுக்கும்! மதுப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள், போதையில் சீக்கிரமே தூங்க முடிவதாகப் பெருமைப்படுவார்கள். ஆனால் இவர்களுக்கு ஆழ்ந்த உறக்கம் சாத்தியமில்லை. எனவே பகல் முழுக்க அரைத் தூக்கத்தோடு நடமாடுவார்கள்.

**தீர்வு:** இரவில் காபி, டீ, நொறுக்குத்தீனி வேண்டாம். மதுபானங்கள் எப்போதும் வேண்டாம். இதற்குப் பதிலாக பால், தயிர், வாழைப்பழம், முட்டை சாப்பிடலாம். இவை மெலடோனின் ஹார்மோனைச் சுரக்கச் செய்து நம் தூக்கத்தை நெறிப்படுத்துகின்றன.

● தூக்கத்தைச் சிலர் கடன் வைப்பார்கள். அதாவது, வேலை இருக்கிறதே என்று சில நாட்கள் மூன்று, நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கி, பிறகு ஒரு நாள் சேர்த்து வைத்துத் தூங்கினால் உடல் சரியாகிவிடும் என நினைப்பார்கள்.

**தீர்வு:** பணக்கடன் போலத் தூக்கக்கடன் ஒரே தவணையில் தீர்வதில்லை. ஒருநாள் தூக்கம் கெட்டாலும், அதைச் சரிசெய்ய மூன்று நாட்கள் நல்ல தூக்கம் தூங்குவது அவசியம்.

● சிலர் தாங்கள் வளர்க்கும் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளோடு தூங்குவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இவர்களில் 63% பேர் நிம்மதியாகத் தூங்குவதில்லை என்கிறது ஒரு ஆய்வு.

**தீர்வு:** வளர்ப்புப் பிராணிகளின் தூக்கமுறையும் நேரமும் உங்களிலிருந்து வேறுபடும். அவை பகலில் இஷ்டம் போலத் தூங்கலாம்; இரவில் விழித்து விளையாடலாம். உங்களால் அது முடியாது என்பதால், அதை வேறு அறையில் தூங்க வைத்துப் பழக்குங்கள்.

● சிலர் இரவில் சீக்கிரமே படுத்து, அதிகாலையில் எழுந்து படித்துவிட்டு அல்லது வேலை பார்த்துவிட்டு மீண்டும் ஒரு சுற்று தூங்கி எழுவார்கள். இப்படிச் செய்தால் ஆரோக்கியமான தூக்கம் சாத்தியமில்லை. இப்படிப்பட்ட தூக்க முறைக்கு உடல் பழகாது. நாள் முழுக்கச் சோர்வும் எரிச்சலுமாக அவதிப்பட நேரும்.

**தீர்வு:** இரண்டு முறை தூங்குவதை ஒரே தடவையாகச் சேர்த்து வைத்துத் தூங்குங்கள். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு அலாரம் வைத்து எழுவதற்குப் பழகினால், பிறகு அலாரம் இல்லாமலே விழிப்பது சாத்தியமாகும்.

● பலர் தூங்குவதற்கு முன்பாக டி.வி., ஸ்மார்ட் போன், டேப்லட், லேப்டாப்பின் திரையைப் பார்த்தபடி இருக்கிறார்கள். இந்தத் திரைகள் உமிழும் நீலநிற ஒளி, தூக்கத்தைத் தூண்டும் மெலடோனின் ஹார்மோன் சுரப்பதைத் தாமதப்படுத்துகிறது. இதன் விளைவாகத் தூக்கமும் தாமதமாகிறது.

**தீர்வு:** படுக்கப் போவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக டி.வியிலிருந்து கண்களை அகற்றிவிடுங்கள். ரேடியோ கேட்பதோ, அதிராத மெல்லிசை கேட்பதோ தூக்கத்துக்கு நல்லது. ●




# உலக வம்சாவளி தமிழ் மாநாட்டில் ராம்ராஜ் காட்டன்!

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 12–வது உலக வம்சாவளி தமிழ் மாநாடு கடந்த டிசம்பர் 6 மற்றும் 7–ம் தேதிகளில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்தியாவின் பாரம்பரியமான பண்பாட்டு ஆடைகளை உலகெங்கும் கொண்டுசெல்லும் புனிதப்பணியை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் செய்துவருவதை அங்கீகரிக்கும் வகையில் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதர் திரு.ஜானகிராமன் அவர்கள் அவரை பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

விழாவில் திரு.கே.ஆர்.நாகராஜன் சிறப்புரையாற்றினார். "இந்தப் பிரபஞ்சத்தில் மனிதர்கள் வாழும் தகுதியுடைய ஒரே கோள் பூமி மட்டுமே. எனவே, நாம் வாழும் இந்தப் பூமி நமக்குச் சொர்க்க பூமி ஆகும். இந்த பூமிப்பந்தில் மனிதர்கள் வாழும் எல்லா இடங்களிலும் இந்தியக் கலாச்சாரத்தைக் கொண்டுசெல்ல வேண்டும். குறிப்பாக அனைவரையும் வேட்டி அணிய வைத்துப் பார்ப்பது ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் லட்சியமாகும். எனவே, உலகின் எந்த மூலையில் மனிதர்கள் வாழ்ந்தாலும், தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டியை அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக உழைத்து வருகிறோம்.

அதேபோல, உலகம் முழுக்க வாழும் பெண்களிடம், நம் பாரம்பரிய உடையான சேலையையும் இந்தியக் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாகக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான முயற்சிகளிலும் ராம்ராஜ் காட்டன் முழுமையாகச் செயல்பட்டு வருகிறது. அதற்கு முன்னோடியாகத் திகழும் ஆஸ்திரேலிய மக்களுக்கு மனமார்ந்த நன்றி" என்று அவர் தன் உரையில் குறிப்பிட்டார்.

விழாவில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலகின் பல நாடுகளில் இருந்தும் வந்திருந்த தமிழ்ச்சமூகத் தலைவர்கள், ஆஸ்திரேலியா வாழ் இந்தியப் பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். உலகெங்கும் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் இணைந்த பண்பாட்டுக் கொண்டாட்டமாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

## இயங்கும்போது சரிசெய்யுங்கள்!

புகழ்பெற்ற இதயச் சிகிச்சை நிபுணர் ஒருவர், தன் காரைப் பழுதுபார்க்க சர்வீஸ் சென்டரில் விட்டிருந்தார். காரின் எஞ்சினில் இருந்த பழுதை நீக்கிய பிறகு அது நன்றாக ஓடியது. காரைப் பழுதுபார்த்த மெக்கானிக், “டாக்டர், உங்ககிட்ட ஒரு சந்தேகம் கேட்கலாமா?” என்று வந்தார். டாக்டர் தலையாட்டினார்.

“டாக்டர், நீங்களும் நானும் கிட்டத்தட்ட ஒரே வேலைதான் பார்க்கிறோம். நான் கார் எஞ்சினைத் திறந்து, அதில் இருக்கும் பிரச்னைகளைச் சரிசெய்து, சில பாகங்களை மாற்றி ஓட வைக்கிறேன். நீங்களும் மனிதர்களின் இதயத்தைப் பரிசோதித்து, அதில் இருக்கும் பழுதுகளைச் சரிசெய்து நன்றாக இயங்க வைக்கிறீர்கள். இரண்டும் ஒரே மாதிரி வேலைதான். எனக்கு மட்டும் சில நூறு ரூபாய்தான் தருகிறார்கள். உங்களுக்கு லட்சங்களில் தருகிறார்கள். ஏன்?”

டாக்டர் சிரித்தபடி பதில் சொன்னார். “நீங்கள் கார் எஞ்சினை நிறுத்திவிட்டுச் சரி செய்கிறீர்கள். நான் துடித்துக்கொண்டிருக்கும் இதயத்தின் பழுதை, அதை நிறுத்தாமல் சரிசெய்கிறேன்.”

டீன் ஏஜ் பிள்ளைகளை நெறிப்படுத்துவதும் இப்படி, துடிக்கும் இதயத்தை சரிசெய்வது போலக் கடினமான வேலை. டீன் ஏஜ் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் மிகவும் கடினமான பருவம். அந்தப் பருவத்தில்தான் அவர் தன்னை உணர்கிறார். மோசமான கவனச்சிதறலுக்கும், பெரும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் அவர் போராடுகிறார். இந்தப் போராட்டத்தில் சரியாக வெல்லும் ஒருவரே உச்சம் தொடுகிறார்.



## எது அளவுகோல்?

- குழந்தையாக அம்மாவின் கருப்பையில் இருந்தபோது உங்களின் இதயம் முழு வடிவம் பெறுவதற்கு ஒன்பது மாதங்கள் ஆனது. அதை ஒன்பது நொடிகளில் யாரோ உடையச் செய்வதற்கு அனுமதிக்காதீர்கள். எல்லா உறவுகள், பிரிவுகளையும் தாண்டி உங்கள் இலக்குகளே வாழ்வில் முக்கியமாக இருக்கட்டும்.
- இலக்குகளையும் தாண்டி, வாழ்வில் உன்னதமான லட்சியங்களை வைத்திருங்கள். ‘என் வேலையில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கில் எளிய குழந்தை ஒன்றைப் படிக்க வைப்பேன்’ என்பது போன்ற லட்சியங்கள் உங்களை உத்வேகமாக இயங்க வைக்கும்.
- உங்களை நல்லவிதமாக நடத்தும் நண்பர்களைத் தேடிப் பெறுங்கள். மகிழ்ச்சியோ, கவலையோ, பயமோ, அதை அப்படியே உங்களுக்கு நம்பகமான ஒருவரிடம் வெளிப்படுத்துங்கள். அவர் தரும் வழிகாட்டுதல் உதவும்.
- வேறு யாரோ ஒருவரின் வாழ்க்கையை அளவுகோலாக வைத்து உங்கள் முன்னேற்றத்தை அளவிடாதீர்கள். இங்கு ஒவ்வொருவரும் வித்தியாசமாக வளர்கிறார்கள்.
- தொழில்நுட்பங்களை அதிகமாகச் சார்ந்திருக்காதீர்கள். அவ்வப்போது மூளையைப் பயன்படுத்துங்கள். இல்லாவிட்டால் தேங்கிப் போவீர்கள்.



## கற்பனை உலகில் தொலையாதீர்கள்!



பலருக்கும் தங்கள் செல்போனைத் திறந்து சமூக வலைதளங்களுக்குள் நுழைந்தால் நேரம் போவதே தெரிவதில்லை. மணிக்கணக்கில் ரீல்ஸ், வீடியோக்கள் பார்க்கிறார்கள். இவர்கள் பார்க்கப் பார்க்க, இவர்களின் ரசனையைப் புரிந்துகொண்டு அடுத்தடுத்த வீடியோக்களை இன்ஸ்டாகிராமும் ஃபேஸ்புக்கும் யூடியூபும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன.

இந்த வீடியோக்கள் உங்களுக்கு மகிழ்ச்சி தருகிறதா? மணிக்கணக்கில் பார்ப்பதால் உத்வேகம் பெற்று உற்சாகமாக உழைக்கப் போகிறீர்களா? எதுவும் இல்லை. பிறகு ஏன் பலரும் இந்த வீடியோக்களில் மூழ்குகிறார்கள்? நிஜ வாழ்வின் பயங்களிலிருந்து தப்பிக்கவே பலரும் சமூக வலைதளங்களில் மூழ்குகிறார்கள். தனியாக உட்கார்ந்து, வாழ்க்கையின் கேள்விகளை யோசிக்க ஆரம்பித்தால் நமக்குப் பயம் வரும். நம்மிடம் அந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடையாது. நேர்மையாக நம் எதிர்காலம் குறித்து யோசிப்பதற்குப் பயந்தே, சோஷியல் மீடியா எனும் கற்பனை உலகில் நேரத்தைத் தொலைக்கிறோம்.

இன்று இல்லாவிட்டாலும், என்றாவது ஒருநாள் அந்த நிஜத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இப்போதே அதற்காக யோசிக்க ஆரம்பித்தால், தன்னம்பிக்கை வரும், மன வலிமை கிடைக்கும். போனை ஓரமாக வைத்துவிட்டு, எதிர்காலம் குறித்து யோசனை செய்யுங்கள்.



## மனதைத் திறக்கலாம்!

ஒரு குழந்தை எப்போதும் பெற்றோரின் நகலாகவே வளர்கிறது. பெற்றோர் ஊக்கப்படுத்தி வளர்த்தால், அந்தக் குழந்தைக்குத் தன்னம்பிக்கைக் கிடைக்கிறது. பெற்றோர் எப்போதும் திட்டி வளர்த்தால், பயத்துடனே வளர்கிறது. பெற்றோருக்கு இருக்கும் பழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொண்டு வளரும் குழந்தை, டீன் ஏஜ் பருவத்தில்தான் அதுகுறித்து யோசித்துக் குழப்பம் அடைகிறது. பெற்றோரின் பாதையிலிருந்து விலகிச் சிந்திக்கும்போது, அந்த டீன் ஏஜ் பிள்ளைக்கு ஒரு தனித்துவ அடையாளம் கிடைக்கிறது. அவர்கள் படிப்பது, பார்ப்பது, நண்பர்களுடன் உரையாடி அறிந்துகொள்வது, எல்லாமே அவர்களின் சிந்தனையை வடிவமைக்கின்றன. நல்ல நண்பர்கள் அமைந்துவிட்டால், அவர்களின் உலகம் சிறப்பாகிவிடுகிறது. ஒவ்வொருவரிடமும் நல்ல குணங்களும் உண்டு, மோசமான குணங்களும் உண்டு. எதை நாம் பார்க்கிறோமோ, அதையே அடைகிறோம். கெட்ட விஷயங்களைப் பார்க்காமல் கண்களை மூடிக்கொள்வது போல, எந்தச் சூழலில் மனதைத் திறக்க வேண்டும், எப்போது மூடிக்கொள்ள வேண்டும் என்பதையும் அறிவோம்.

## கூட்டத்தைப் பின்பற்றாதீர்கள்!

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக, கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மாறிவிட்ட ஓர் உலகத்தை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள். கிட்டத்தட்ட 800 கோடியைத் தாண்டிவிட்ட மக்கள்தொகை. போட்டி மிகவும் கடுமையாகிவிட்டது. இதுவரை தாராளமாகப் பொருளாதார உதவிகளைச் செய்துவந்த அரசாங்கங்கள், செலவைக் குறைக்க தங்களின் பட்ஜெட்களை இறுக்கிவிட்டன. பெரும்பாலான நாடுகள் கடனில் தவிக்கும்போது, மக்களுக்கும் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லாத சூழல். இந்த உண்மைகள் எதையும் நாம் பள்ளி, கல்லூரிப் பாடங்களில் படிப்பதில்லை. வெளியில் வந்து சமூகத்தைப் பார்க்கும்போது புரிந்துகொள்கிறோம்.

எனவே, எதிர்காலத்துக்குக் கச்சிதமாகத் திட்டமிடுங்கள். முழுக் கவனத்தையும் அதற்காகச் செலுத்துங்கள். உங்களுக்கு நன்கு தெரிந்த ஒரு துறையில் மிகச்சிறந்த நிபுணர் ஆகிவிடுங்கள். தொடர்ந்து கற்றுக்கொள்ளவும், கடினமாக உழைக்கவும் தயங்காதீர்கள். உங்கள் பழக்கங்களில் ஒருவித ஒழுங்கு இருக்கட்டும். எல்லோரும் செய்வதையே நீங்களும் செய்யாதீர்கள். கூட்டத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாதீர்கள். மற்றவர்களைப் பின்பற்றுவதைவிட, தலைமையேற்கும் தகுதி பெறுங்கள்.



# திருமணத்துக்கு நீங்கள் ரெடியா?



இளைய தலைமுறைக்கு இன்று திருமணத்தைத் தள்ளிப் போட நிறைய காரணங்கள் இருக்கின்றன. 'வாழ்க்கையில் செட்டிலான பிறகுதான் திருமணம்' எனப் பலரும் சொல்கிறார்கள். அவர்களிடம், 'வாழ்க்கையில் செட்டிலாவது என்பது என்ன?' என்ற கேள்விக்குப் பதில் இல்லை. பொருத்தமான தருணத்தைத் தேடி திருமணம் செய்து கொள்ளாவிட்டால், வாழ்க்கை ரயிலைத் தவறவிட்ட சூழலுக்கு ஆளாக நேரிடும். தான் திருமணத்துக்குத் தயாராக இருக்கிறோமா, இல்லையா என்பதை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள இதோ சில வழிகள்...

- 'திருமணம்' என்றதும், அந்த மகிழ்ச்சியான விழாக் கொண்டாட்டம், உறவினர்கள் அத்தனை பேரும் ஒன்று சேரும் தருணம், நண்பர்களின் சந்தோஷ உரையாடல்கள், எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையில் புதிதாக இணையும் ஒரு துணை... இப்படி பூரிப்பில் திளைக்கச் செய்யும் நினைவுகள் வந்தால் நீங்கள் திருமணம் செய்துகொள்ளலாம். பதிலாக, மண்டப வாடகை, உபசரிப்பு செலவு, எல்லாச் செலவுகளுக்காகவும் வாங்கும் கடன்கள் எனப் பணத்தைப் பற்றிய பயமே பிரதானமாகத் தெரிந்தால்... திருமணத்தைத் தள்ளிப் போடுங்கள்.

- நம்பிக்கை என்பதே திருமணத்தில் பிரதானமான விஷயம். வாழ்க்கைத்துணையை விடுங்கள். ஒரு நண்பரோ, ஆபீஸ் சீனியரோ, பக்கத்து வீட்டில் இருக்கும் தெரிந்த நபரோ, யாரையாவது உங்களால் முழுமையாக நம்ப முடிய வேண்டும். இவரை நம்பி இதைச் சொல்லலாம், இவரை நம்பி இதைச் செய்யலாம் என்ற உணர்வு உங்களுக்குள் எழ வேண்டும். அந்த நம்பிக்கை உணர்வு உங்களுக்குள் கிளர்ந்தெழும் வரை காத்திருங்கள்.

- உறவுகளை நீங்கள் எப்படி அணுகுகிறீர்கள் என்பதும் முக்கியம். வம்பு பேசாத, கண்ணியமான, அடுத்தவர்களின் அந்தரங்கத்தில் மூக்கு நுழைக்க விரும்பாத, பிறரது துன்பங்களில் துணையிருக்கிற மாதிரியான உறவினர்களாகவே எல்லோரும் இருப்பதில்லை. ஆனாலும் சிலரைச் சகித்துக்கொண்டு சிரித்துப் பேச வேண்டும். இப்படி அனுசரித்துப் போகப் பழகாதவர்கள் திருமணத்தைத் தள்ளிப் போடலாம். ஏனெனில் வாழ்க்கைத்துணை வந்த பிறகு, அவரின் உறவுகளில் சிலரிடம் இப்படிச் சகித்துப் போக வேண்டும். அவர்களை அலட்சியம் செய்தால், திருமண வாழ்க்கை இனிக்காது!

- சில பேருக்கு அளவுக்கு அதிகமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் பிடிப்பதில்லை. வீட்டில், அலுவலகத்தில், நண்பர்கள் வட்டத்தில் என எல்லா இடங்களிலும் எதையும் தட்டிக் கழித்தே பழகியிருப்பார்கள். ஆனால், திருமணம் என்பது மிகப்பெரிய பொறுப்பு. உயிருள்ள இன்னொரு துணையைப் பார்த்துக்கொள்ளும் மாபெரும் பொறுப்பு.

மற்ற விஷயங்களைப் போல இதைத் தட்டிக் கழிக்க முடியாது. பொறுப்பை ஏற்கும் பக்குவம் பெறும் வரை திருமணத்தைத் தள்ளிப் போடுங்கள்.

● சிலர் சாப்பிடுவது, தூங்குவது என எல்லா வேலைகளையும் தனியாகவே செய்ய விரும்புவார்கள். தங்கள் பொருட்களை யாராவது எடுத்தால் கோபம் அடைவார்கள். தங்கள் அறையைக் கூட யாருடனும் பகிர்ந்துகொள்ள விரும்ப மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களை மாற்றிக்கொள்ளும் வரை காத்திருப்பது நல்லது.

● பலருக்குப் புதிய இடம் மட்டுமில்லை... புதிய உறவுகூடப் பயம் தரும். குறிப்பாகப் பெண்களுக்கு இப்படிப்பட்ட பயம் அதிகம். அப்படிப்பட்ட அச்சத்தோடு திருமணம் செய்துகொள்வது நல்லதல்ல. மற்ற உறவுகளைப் போல் வாழ்க்கைத்துணையைப் பார்க்கக்கூடாது. அந்தப் பயம் தொடர்ந்தால் வாழ்க்கை இனிக்காது.

● 'எனது நேரம் மகத்தானது. அதில் பெரும்பகுதியை எனக்காக மட்டுமே செலவழிக்க ஆசைப்படுகிறேன். எதற்காகவும், யாருக்காகவும் என் நேரத்தைப் பங்கு போட்டுக்கொள்ள மாட்டேன்' என்பவரா நீங்கள்? நீங்கள் இப்போதைக்குத் திருமணத்திற்குத் தயாராக இல்லை என அர்த்தம்.

● யாருக்கும் எதையும் விட்டுத் தருவது உங்களுக்கு பிடிக்காதா? எதற்காகவும் யாருடனும் சமரசம் செய்துகொள்ள மாட்டீர்களா? உங்களுடைய இந்த குணங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால், நீங்கள் திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் பெற முடியாது. சுயநலமற்ற சமரசங்கள் செய்துகொண்டு, வாழ்க்கைத்துணைக்காக எதையும் விட்டுக் கொடுக்கிற பக்குவம் நிறைந்தவர்களே திருமண வாழ்வில் மகத்தான வெற்றி காண்கிறார்கள்.

● யாரோ ஒருவரின் வற்புறுத்தலுக்கு இணங்கி திருமணம் செய்துகொள்வது சரியல்ல. அந்த அவசரத்தில், அவசியமான சில விஷயங்களைப் பார்க்காமல் விட்டு விடுவார்கள். அது காலம் முழுக்க அந்தத் தம்பதியை வருத்தத்தில் வைத்திருக்கக் கூடும். படிப்பில் கூட பிடிக்காவிட்டால் மாற்றிக்கொள்ள இன்னொரு வாய்ப்புக் கிடைக்கலாம்; வாழ்க்கைத்துணை விஷயத்தில் இப்படி இருக்கக்கூடாது.

● வீட்டிலோ, அலுவலகத்திலோ, அக்கம்பக்கத்திலோ கவனித்துப் பாருங்கள். யாராவது தங்கள் மனக்குறைகளைச் சொன்னால், அதை அக்கறையோடு கேட்டு ஆறுதல் சொல்பவர்களிடம் எல்லோரும் உடனே நட்பாகி விடுவார்கள். புலம்பலைக் கேட்டு, 'அப்படியா?' என உணர்ச்சியே இல்லாமல் நகர்ந்து போகிறவர்களை முதுகுக்குப் பின்னால் திட்டுவார்கள். தங்கள் குறைகளைச் சொல்லும் யாரும், அதற்கான தீர்வை உங்களிடம் கேட்கவில்லை. அவர்களுக்குத் தேவை, அந்த மனக்காயங்களுக்கு மருந்து. ஒத்தடம் போன்ற ஆறுதல் வார்த்தைகள் அவர்களுக்கு இதம் தரும். இல்லறத்திலும் இப்படிப்பட்ட வார்த்தைகள்தான் மந்திரப் பிணைப்பை தரும். அன்பாகப் பேசக் கற்றுக்கொண்ட பிறகு துணை தேடுங்கள்.



● சலனமற்ற மனது வாழ்க்கைத்துணையைத் தீர்மானிக்கும் விஷயத்தில் முக்கியம். 'வாழ்க்கைத்துணை இப்படி இருக்க வேண்டும்' என முடிவெடுத்துவிட்டு, அந்த எதிர்பார்ப்புகளோடு நூறு சதவிகிதம் பொருந்திப் போகிற துணையைக் கரம் பிடியுங்கள். அதுவரை காத்திருப்பதில் தவறில்லை. அரை மனதோடு ஒரு முடிவெடுத்துவிட்டு, அப்புறம் யாரையாவது பார்த்ததும் 'அவசரப்பட்டு விட்டோமோ' என யோசிப்பதும் இல்லறக் கடலில் மகிழ்ச்சிக் கப்பலை மூழ்கடித்து விடும்.

● உங்கள் தொழில் அல்லது வேலையையே திருமணம் செய்துகொண்டு, அதோடு உங்கள் குடும்ப வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளீர்களா? வீட்டுக்கு வந்த பிறகும் போனிலும் கம்ப்யூட்டரிலும் ஆபீஸ் வேலைகளைப் பார்த்தபடி வேலையுடன் ஒன்றிப்போய் இருப்பவர்களுக்கு திருமணத்தின் மீது நாட்டம் வராது. அலுவலக வாழ்வையும், குடும்ப வாழ்வையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கும் பக்குவம் வரும்வரை இவர்கள் காத்திருப்பதில் தவறில்லை.

● திருமணத்தின் இனிய பயன், குழந்தைதான்... அது உடனடியாகவோ, அல்லது சில ஆண்டுகள் கழித்தோ! ஆனால் ஒரு குழந்தையைப் பெற்று, வளர்த்து ஆளாக்குவதை நீங்கள் சிரமமான விஷயமாக நினைத்தால், குழந்தை மீது உங்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருந்தால், திருமணத்திற்கு நீங்கள் இப்போது தயாராக இல்லை. குழந்தைகளை நேசிக்கும் மாற்றம் ஒன்று உங்களுக்குள் நிகழும். அப்போது நீங்கள் தாராளமாகத் திருமணம் செய்து கொள்ளலாம். ●

# இளைய தலைமுறையே...

## - சுவாமி விவேகானந்தர் மொழிகள்

- நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமையுள்ளவனாக நினைத்தால், வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்.
- கீழ்ப்படிவதற்கு முதலில் கற்றுக்கொள்ளுங்கள். கட்டளை இடும் பதவி தானாக உங்களை வந்தடையும்.
- உங்களிடம் அன்பு இருந்தால், உங்களால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. நீங்கள் தன்னலம் துறந்தவர்களாக இருந்தால், உங்களை எதிர்க்கும் சக்தி எதுவும் இல்லை.
- பூமித்தாயைப் போல அனைத்தையும் பொறுப்பவராக இருங்கள். நீங்கள் பொறுமையுடன் இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.
- ஆயிரம் முறை தோற்றாலும் உங்கள் வாழ்க்கை லட்சியத்தைக் கைவிட்டு விடாதீர்கள். மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான். தோல்வி மனப்பான்மைக்கு மனதில் இடம் தராதீர்கள்.
- அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை... இவையே நமக்குத் தேவை.
- முப்பத்து மூன்று கோடி தெய்வங்கள் மீதும் நம்பிக்கை வைத்தாலும், ஒருவனுக்கு தன்மீது தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனால் வாழ்வில் உயர்வு பெற முடியாது.
- ‘இவரை நம்பு’ அல்லது ‘அவரை நம்பு’ என்று மற்றவர்கள் யார் யாரையோ கைகாட்டுகிறார்கள். ஆனால், நான் சொல்கிறேன். முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அதுதான் வாழ்க்கைக்கு வழி.
- நீ செல்லும் பாதையானது, கத்திமுனையில் நடப்பதைப் போல மிகவும் கடினமானதாக இருக்கலாம். நம்பிக்கையை இழந்துவிடாதே! எழுந்திரு. விழித்துக் கொள். மனம் தளராதே. நீ அடையவேண்டிய குறிக்கோளைக் கண்டுபிடி.
- மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ உன் முடிவில் உறுதியாக இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடக்கும். அதைப் பார்த்து உலகம் காலடியில் பணிந்து கிடக்கும்.
- வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியும், பெரும் மன உறுதியும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.
- நீங்கள் எந்த அளவுக்கு உயர்ந்த நிலைக்குப் போக நினைக்கிறீர்களோ, அந்த அளவுக்கு ஏற்றபடி கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.



- அமைதியான மனமே உங்களின் மிக முக்கியமான மூலதனம். அதுவே எல்லா வெற்றிகளையும் கொண்டுவரும்.
- துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வது மேலானது.
- எந்த ஒரு செயலைத் தொடங்கும்போதும், தவிர்க்க முடியாத தவறுகள் சில ஏற்படவே செய்யும். அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.
- ஒரு செயலில் கிடைக்கும் பலனில் காட்டும் அக்கறையை விட, அந்தச் செயலைச் செய்யும் முறைக்கே அதிக அக்கறை கொடுக்க வேண்டும். நான் கற்றுக்கொண்ட பாடங்களில் முக்கியமானதும், பெரியதும் இதுவேயாகும். இந்த ஒரு பாடத்திலிருந்து நான் பல பாடங்களைக் கற்றுக்கொண்டே வருகிறேன்.
- உங்களுக்குள் இருப்பதை உங்கள் உழைப்பால் வெளியில் கொண்டு வாருங்கள். பிறரைப் பார்த்து நடிக்காதீர்கள். பிறரிடம் காணப்படும் நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- அடக்கப்படாமல் சரியான வழியில் செலுத்தப்படாத மனம், நம்மைக் கீழே இழுத்துச் சென்றுவிடும். அடக்கப்பட்டு சரியான வழியில் செல்கின்ற மனமே நம்மை உயரச் செய்யும்.
- பிறரிடமிருந்து நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்ள மறுப்பவன், இறந்தவனுக்கு ஒப்பாவான்.
- வாழ்வில் காயமே படாதவன்தான் தழும்பைக் கண்டு நகைப்பான்.
- உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால், எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.
- கல்வி என்பது ஒருவருடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பது அல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் நன்றாக ஜீரணமாகி, வாழ்க்கைக்குப் பயன்படவேண்டும்.
- நூல்களைக் கற்கலாம். சொற்பொழிவுகளைக் கேட்கலாம். பல மணி நேரம் தொடர்ந்து பேசலாம். ஆனாலும் அனுபவமே சரியான ஆசான். அதுவே உண்மையான கல்வி.
- ஆயிரம் முறை இடறி விழுவதன் மூலம்தான், சரியான பாதையில் செல்லக் கற்றுக்கொள்ள முடியும்.
- ஒருவன் நன்மையிலிருந்து அறிவைப் பெறுவது போலவே, தீமையிலிருந்தும் அறிவைப் பெறுகிறான்.
- விட்டுக் கொடுத்து, எவன் பிறருடைய கருத்துகளை ஏற்க ஆயத்தமாய் இருக்கிறானோ, இறுதியில் அவனுடைய கருத்துகள் வெற்றி அடைகின்றன.
- ஒருவனுடைய உண்மைத்தன்மையை ஆராய வேண்டுமானால், அவனது பெரிய செயல்களைப் பார்க்க வேண்டாம். அவன் செய்யும் சாதாரண காரியங்களைக் கவனித்தாலே அவனுடைய உண்மைத்தன்மை தெரியும்.
- நீங்கள் எவ்வளவு மோசமான சூழலில் இருந்தாலும், அதை நினைத்துக் கவலைப்பட வேண்டாம். நமது குழந்தைப்பருவ நிலையை எண்ணி இப்போது சிரிப்பது போல, இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதைய நிலையை எண்ணிச் சிரிப்போம்.
- கவலைகளை நாளைக்கும் மன மகிழ்ச்சிகளை இன்றைக்கும் வைத்துக்கொள்வோம். அப்போதுதான் வாழ்க்கை சுமையாக இருக்காமல், சுவையாக இருக்கும்.
- அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை, அன்புதான் வாழ்க்கை.
- அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும், அதைவிட அதிகமாகத் திரும்பப் பெறலாம்.
- விருப்பங்களுக்கும் கோபத்திற்கும் அடிமையாக இருந்தால், உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை உணர முடியாது.
- யார் ஒருவன் தனக்குள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ, அத்தகையவன் அவமானத்தையே அடைகிறான்.
- பிறருடைய உத்தரவுக்குப் பயந்து பயந்து நடப்பவர்கள், நாளடைவில் சிந்திக்கும் சக்தியை இழந்து விடுகிறார்கள்.
- கடந்த கால வாழ்க்கையைப் பின்னோக்கிப் பாருங்கள். நீங்கள் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற முயற்சி செய்ததையும், அப்படி எதுவும் வராமல் போனதையும்தான் காண்பீர்கள். வந்த உதவிகள் எல்லாம் உங்களுக்குள் இருந்து வந்தவையாகவே இருக்கும்.
- தன்னலமற்று மக்களுக்கு உழைக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பணி, தெய்வத்திற்குச் செய்யும் திருத்தொண்டைப் போன்றது.
- எதிரிகளை அழிக்க ஒரே வழி, அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.
- உனக்கு எத்தனை மொழிகள் தெரிந்தால் என்ன? உன் மொழி இலக்கணச் சுத்தமாக இல்லாவிட்டால் என்ன? நீ யாராக இருந்தால் என்ன? கேள்வி இதுதான்... உன்னிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கிறதா – அப்படியானால் அதை நீ மற்றவருக்குக் கொடு!
- தனது குழந்தைகளில் யாரேனும் ஒருவருக்காவது உதவி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் உங்களுக்குக் கொடுத்தால், அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவர் ஆகிறீர்கள். ●

- நம் வாழ்வில் எது நடந்தாலும், அது ஒரு காரணத்துக்காகவே நடந்திருக்கிறது. நேர்மறையாக நடப்பவற்றை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுங்கள். எதிர்மறையாக ஏதேனும் நடந்தால், உங்கள் முயற்சியால் அதை மாற்றப் பாருங்கள்.
- எல்லோரது வாழ்விலும் பிரச்னைகள் இருக்கின்றன. சிலர் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் வாழ்வில் பிரச்னை இல்லாமல் இல்லை. பிரச்னைகளை அவர்கள் பார்க்கும் கோணம் வேறு என்பதால் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். பிரச்னைகளை வேறு கோணத்தில் பார்த்துத் தீர்வு காணும்போது மகிழ்ச்சி கிடைக்கும்.
- தேர்வுகளில் நீங்கள் எடுக்கும் மதிப்பெண்கள் மட்டுமே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில்லை. உங்கள் முயற்சிகள், திறமை, மன உறுதி, செயல்கள், எதையும் அணுகும் விதம் என்று பல விஷயங்கள் அதை முடிவு செய்கின்றன.




- எல்லாப் பூட்டுகளும் சாவியுடன்தான் தயாரிக்கப்படுகின்றன. அதேபோல எல்லா நெருக்கடிகளுக்கும் தீர்வுகள் உண்டு. அவை சரியான நேரத்தில் நிகழும். பொறுமை இழக்காமல் முயற்சியைத் தொடருங்கள்.
- இளமைப் பருவத்தில் பல விஷயங்கள் உங்கள் கவனத்தைச் சிதறடிக்கும். இது இயல்புதான். ஆனால், எவ்வளவு வேகமாக அதிலிருந்து மீண்டு உங்கள் இலக்கைக் கவனத்துடன் தொடர்கிறீர்கள் என்பது உங்கள் முடிவில்தான் இருக்கிறது.
- சோம்பலை எந்த அளவுக்குத் தவிர்க்கிறீர்களோ, அந்த அளவுக்கு உங்களின் வெற்றிக்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.
- உருப்படியான செயல்களுக்கு உங்கள் வாழ்வில் எவ்வளவு நேரத்தை ஒதுக்குகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் எதிர்காலம் வளமாவதும், பலவீனமாவதும் நிகழ்கிறது. எப்படிப்பட்டவராக நீங்கள் எதிர்காலத்தில் இருக்க வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்கிறீர்கள்.
- நீங்கள் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை உங்கள் நண்பர்களே தீர்மானிக்கிறார்கள். நல்ல நண்பர்களைத் தேடிப் பெறுங்கள். உங்கள் வீட்டுக்கு வந்தால், குடும்பத்தினர் தயக்கமின்றி வரவேற்று இயல்பாக உரையாடும் நண்பர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.
- எல்லோருடைய வாழ்விலும் போராட்டங்கள் இருக்கின்றன. உங்கள் வாழ்க்கைப் போராட்டங்களை இன்னொருவரின் போராட்டங்களுடன் ஒப்பிடாதீர்கள். வாழ்வில் போராடி முன்னேறுவதை ரசித்துச் செய்யுங்கள். பிற்காலத்தில் உங்கள் பிள்ளைகளிடமும் இந்த உலகத்திடமும் பெருமிதத்துடன் சொல்ல வேண்டிய வெற்றிக்கதை அது.
- வேலை, தொழில், வியாபாரம் என எதுவாக இருந்தாலும் அதைக் கவனத்துடன் தேர்வு செய்யுங்கள். ஏனெனில், அதுதான் இனி உங்கள் எதிர்கால அடையாளமாக இருக்கப் போகிறது. இதில் மற்றவர்களின் அறிவுரைகளைக் கேளுங்கள். ஆனால், இறுதி முடிவு என்பது நீங்கள் எடுப்பதாக இருக்கட்டும்.
- உங்கள் கல்வி மற்றும் வாழ்க்கை அனுபவங்களை வைத்து எந்த விஷயத்திலும் முடிவுகளை எடுங்கள். அடுத்தவர்களின் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாதீர்கள். உங்கள் சுயசிந்தனை அப்புறம் காணாமல் போய்விடும்.
- வாழ்க்கை என்பது ஒரு ஐஸ்க்ரீம் போன்றது. அது உருகிக் கரைந்து காணாமல் போய்விடக்கூடாது. அனுபவித்து ருசித்து அதை அடைய வேண்டும். •




# ‘மைல்கல்’ நூல் வெளியீட்டு விழா!

ராம்ராஜ் காட்டன் சார்பில் மகாபலிபுரத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற ‘Cultural Connect’ என்கிற இரண்டு நாள் பிரமாண்ட நிகழ்வில், ‘மைல்கல்’ நூல் வெளியிடப்பட்டது. ராம்ராஜ் காட்டன் வெளியீடாக வரும் ‘வெண்மை எண்ணங்கள்’ இதழின் ஆசிரியர் பொறுப்பில் இருக்கும் பத்திரிகையாளரும் இயக்குநருமான திரு. த.செ.ஞானவேல் அவர்கள் எழுதிய நூல் இது. கொங்கு மண்டலத்தில் இருக்கக்கூடிய பிரபலமான பிராண்ட்கள், அந்த பிராண்ட்களை உருவாக்கிய தொழிலதிபர்கள், அவை எப்படி இன்றைக்குக் கொங்கு மண்டலத்தின் அடையாளமாக, இந்தியாவின் அடையாளமாக மாறியிருக்கின்றன என்று அவர்களின் வெற்றிக்கதைகளைக் கொண்ட தொகுப்பு இது. ‘இந்து தமிழ் திசை’ நாளேட்டின் கொங்கு பதிப்பில் தொடராக வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து இந்த ‘மைல்கல்’ நூல் வெளியாகியுள்ளது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் தலைவருமான திரு. K.R. நாகராஜன் அவர்கள் உட்பட பல தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் வெற்றி ரகசியங்களை இந்த நூலில் வெளிப்படையாகப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

தங்கள் வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றும் முயற்சியை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் முதன்முதலில் தொடங்கியது. அந்த வகையில், வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றும் முயற்சியின் தொடர்ச்சியாக டீலர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இம்மாதிரியான தொழில் விஷயங்கள் சார்ந்த ஆர்வத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த நிகழ்ச்சியில் வைத்து ‘மைல்கல்’ நூல் வெளியிடப்பட்டது.

இந்தியாவினுடைய அடையாளமாக எப்படி ராம்ராஜ் காட்டன் நிறுவனம் மாறியிருக்கிறதோ, அதே போல இந்தியா முழுவதும் வர்த்தகம் செய்யக்கூடிய கொங்கு மண்டலத்தில் உருவான பிராண்ட் பற்றிய கதைகளைக் கேட்கும்போது, தொழில் ஆர்வமும், உத்வேகமும் நமக்கு வரும் என்பதற்காக விற்பனையாளர்கள், டீலர்கள் மத்தியில் இந்நூலை வெளியிட முடிவு செய்யப்பட்டிருந்தது. நிகழ்விற்கு வந்திருந்த ஐந்து சிறப்பு விருந்தினர்களும் ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் தலைவருமான திரு. K.R. நாகராஜன் அவர்களுடன் இணைந்து இந்நூலை வெளியிட்டார்கள்.

இந்தியாவிலேயே அதிகமான ரீஜினல் பிராண்ட்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதிலும் தமிழ்நாட்டிலேயே அதிகமாகக் கொங்கு மண்டலத்தில்தான் இருக்கின்றன. கொங்கு மண்டலம் ஏன் தொழில் ஆர்வத்தில் அதிகமான பங்களிப்பைத் தருகிறது என்பது இந்நூலில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ●

# டீன் ஏஜ்

## ஊக்கம் தருவது எப்படி?

காற்றில் அலைக்கழிக்கப்படும் நூலறுந்த பட்டம் போல, திசை தெரியாமல் தவிப்பார்கள் டீன் ஏஜ் பருவத்தினர். அவர்களை யார் யாரோ தவறான வழிகாட்டி விபரீதமான பாதைகளில் இழுத்துச் சென்றுவிடும் ஆபத்து உண்டு. பெற்றோர், ஆசிரியர்கள், உறவுகள், நண்பர்கள் அக்கறையுடன் அவர்களை அணுகி நெறிப்படுத்த வேண்டும். சோர்ந்து போயிருக்கும் அவர்களை ஊக்கப்படுத்தி வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வது சாதாரண விஷயம் இல்லை. அதைச் செய்வதற்குச் சில வழிகள்:

- டீன் ஏஜ் பருவத்தினரிடம் முதலில் நம்பிக்கையைப் பெறுங்கள். கனிவுடன் அவர்களை அணுகி அவர்களின் நம்பிக்கையைப் பெறும்போதுதான், அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியும். அவர்களின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் இலக்குகளை அறிய முடியும்.
- முதலில் அவரது சூழலைப் புரிந்துகொள்ளுங்கள். அவர் தன் வாழ்வில் முன்னேறவோ, வெற்றி அடையவோ முடியாதபடி எது தடுக்கிறது என்பதைக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.
- அவர்கள் தங்கள் பிரச்னைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்துப் பேசும்போது கவனமாகக் கேளுங்கள். அவர்கள் சொல்லும் எந்த விஷயத்துக்கும் தீர்ப்பு சொல்லும் ஒரு நீதிபதி போலவோ, அறிவுரை சொல்லும் ஒரு விமர்சகர் போலவோ உடனுக்குடன் பதில் பேசாதீர்கள். அவர்கள் முழுமையாகச் சொல்லி முடிக்கும்வரை காத்திருங்கள். அவர்கள் சொல்வதை முழுமையாக ஆமோதித்துவிட்டு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.
- அவர்கள் சொல்லும் புகார்களைக் கவனமாகக் கையாளுங்கள். ‘‘என் ஆசிரியர் என்னை வெறுக்கிறார்” என்று மகன் சொல்லும்போது, “அவர் நல்ல மனுஷன் ஆச்சே... அப்படியெல்லாம் செய்ய மாட்டாரே’’ என்று எதிர்கேள்வி கேட்காதீர்கள். “அப்போ நான் பொய் சொல்றேனா?” என்று மகன் கோபம் கொள்வான். “அவர் உன்னை வெறுக்கறதா உனக்கு ஏன் தோணுது?’’ என்று கேளுங்கள். அவன் சொல்லும் சம்பவங்களைப் பொறுமையாகக் கேட்டுத் தீர்வு சொல்லுங்கள்.
- டீன் ஏஜ் பருவத்தினர் எந்தப் பிரச்னை குறித்தும் உங்களிடம் வெளிப்படையாகப் பேசலாம் என்ற நம்பிக்கையைக் கொடுங்கள். பதற்றமும், தன்னம்பிக்கை குறைவதும்தான் அவர்கள் சோர்ந்து போவதற்கு முக்கியமான காரணம். அதைச் சரிசெய்யுங்கள்.
- அவர்கள் குழப்பத்தில் இருக்கும்போது எந்தவிதமான அழுத்தமும் கொடுக்காதீர்கள். ‘‘அடுத்த எக்ஸாம்ல நீ சென்டம் வாங்கலைன்னா அவ்வளவுதான்!”, “ராத்திரி 8 மணிக்கு மேல நீ எங்கேயும் போகக்கூடாது” என்பது போன்ற கட்டளைகள் போடுவது



அவர்களிடம் எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும். அதற்குப் பதிலாக, ‘நல்ல மார்க் வாங்குவதன் மூலம் கிடைக்கும் நல்ல உயர்கல்வி வாய்ப்புகள், அதன் மூலம் அடைய முடியும் உயர்வான வாழ்க்கை’ என்பது குறித்து அவர்களிடம் பொதுவாக உரையாடலாம். இரவில் நீண்ட நேரம் நண்பர்களுடன் செலவிடும்போது நம்மிடம் தொற்றக்கூடிய தவறான பழக்கங்கள் குறித்துப் பேசலாம்.

• அவர்கள் எதை முக்கியமாக நினைக்கிறார்கள், எது அவர்களுக்கு ஆர்வம் தருகிறது என்பதைக் கண்டறியுங்கள். கணிதம் நன்றாகப் போடக்கூடிய ஒரு மாணவருக்கு வேதியியல் கசக்கலாம். சிலர் படிப்பைத் தாண்டி இசையில் ஜொலிக்கலாம். அவர்களின் ஆர்வத்தைச் செழுமைப்படுத்த உதவுங்கள். அதே சமயத்தில், தங்கள் எதிர்காலம் குறித்த இலக்குகளை வடிவமைத்துக்கொள்ள அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

• உடலில் நிகழும் ஹார்மோன் மாற்றங்கள் காரணமாக அவர்கள் ஒருவித மன அழுத்தம் அடைவார்கள். அந்த அறிகுறிகளைக் கவனமாகப் பாருங்கள். எரிச்சல், கோபம், திடீரென அழுவது, ‘நான் எதையும் செய்யத் தெரியாதவன்’ என விரக்தியாகப் பேசுவது, சரியாகத் தூங்காமல் போவது, நேரத்துக்குச் சாப்பிடாமல் இருப்பது, எதிலும் முழுக் கவனம் செலுத்த முடியாதது, எப்போதும் சோர்வாக இருப்பது ஆகியவை மன அழுத்தத்தின் அறிகுறிகள். அதிலிருந்து அவர்களை மீட்டெடுங்கள்.

• சில பிள்ளைகள் தங்களின் இயல்புகளைத் தொலைத்துவிட்டுப் பதற்றத்தில் இருப்பார்கள். தங்களுக்குள் இருக்கும் கேள்விகளுக்கு விடை தெரியாத தவிப்பு அது. தேர்வில் மதிப்பெண்கள் குறையும், யாருடனும் சரியாகப் பேச மாட்டார்கள், தலைவலி என்று அடிக்கடி சுருண்டு விடுவார்கள், எந்த விஷயத்திலும் சரியாக முடிவெடுக்க முடியாமல் திணறுவார்கள். இவர்களைக் கனிவுடன் அணுகி மீட்க வேண்டும்.



• டீன் ஏஜ் பிள்ளைகளுக்கு நீங்கள் வழிகாட்டலாம். ஆனால், எல்லா நேரங்களிலும் அவர்களுக்கான முடிவுகளை நீங்களே எடுத்துக் கொண்டிருந்தால், அவர்கள் எதையும் கற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒரு கட்டத்தில் அவர்களுக்கு எரிச்சலும் ஏற்படும். எனவே, ஏதோ ஒரு கட்டத்தில் அவர்களை உங்கள் பிடியிலிருந்து விடுவித்து சுதந்திரமாக இயங்க விடுங்கள். அவர்களுக்கான முடிவுகளை



அவர்களே எடுக்கட்டும்! அது சரியாக இருந்தால் பாராட்டுங்கள், தவறாக இருந்தால் ஆலோசனை சொல்லி நெறிப்படுத்துங்கள்.

• தேர்வில் மதிப்பெண் குறையும்போது, “நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு” என்று திட்டுவது தீர்வு இல்லை. ‘இதற்கு எது காரணமாக இருக்கும்?’ என்று கேள்விகள் கேட்டு உரையாடுங்கள். படிக்க நேரம் இல்லையா, பாடங்கள் புரியவில்லையா, கவனம் குவித்துப் படிப்பது சிரமமாக உள்ளதா, தேர்வு நேரத்தில் ஏதேனும் பிரச்னையா என்று கேளுங்கள். “எனக்கு கெமிஸ்ட்ரியே பிடிக்கலை” என்று அவர்கள் சொன்னால், “அப்படி ஒரு பாடத்தை வெறுத்துவிட்டு உயர்கல்விக்குப் போக முடியாது” என்ற யதார்த்தச் சூழலை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

• சின்னக் குழந்தைகளுக்குப் பரிசுகளோ, தண்டனைகளோ கொடுப்பது ஒருவகையில் சரியாக இருக்கலாம். ஆனால், டீன் ஏஜ் பருவத்தில் இதைத் தொடர்வது சரியில்லை. “பிளஸ் 2 தேர்வுல 490 மார்க் வாங்கினா உனக்கு லேப்டாப் வாங்கித் தர்றேன்” என்று உறுதி தருவதோ, ‘மார்க் குறைந்தால் அப்பா அடிப்பார்’ என்று அச்சத்தை மனதில் விதைப்பதோ நல்ல விளைவுகளைத் தராது. இரண்டையுமே தவிர்த்துவிடுங்கள்.

• பள்ளி அல்லது கல்லூரி முடித்து வந்ததும் ஒரு கோச்சிங் கிளாஸ், அது முடிந்ததும் இன்னொரு கோச்சிங் கிளாஸ் என்று அவர்களுக்குச் சுமைகள் அதிகம் இருக்கும்போது வேறு வேலைகளையும் சுமைகளாகத் தரக்கூடாது. பக்குவம் குறைந்த அந்த வயதில் வேலைப்பளு என்பது அவர்களை நெருக்கடியில் தள்ளிவிடும். அவர்கள் தங்கள் கடமைகளை எந்த அழுத்தமும் இல்லாமல் செய்வதற்குப் பழக்குங்கள்.

• வாக்குவாதங்களோ, அறிவுரைகளோ டீன் ஏஜ் பருவத்தினரிடம் எந்த விளைவையும் ஏற்படுத்தாது. எந்தச் சூழலிலும் முரண்பட்டு வாக்குவாதத்தில் இறங்காதீர்கள். அவர்களாகக் கேட்டால் மட்டுமே அறிவுரை சொல்லுங்கள். ●



# டீன் ஏஜ் பருவத்தினரிடம் உரையாடுவது எப்படி?

கடந்த தலைமுறைப் பிள்ளைகள், ‘அப்பாவின் மூட் எப்படி இருக்குன்னு தெரியலை. அவர் கோபமா இல்லாத நேரம் பார்த்துப் பேசணும்’ என்பார்கள். இந்தத் தலைமுறை அப்பாக்கள், ‘நம்ம பையன் மூட் எப்படி இருக்குன்னு தெரியலை. அவன் நல்லா இருக்கற நேரத்துல அவன்கிட்ட பேசணும்’ என்று நினைக்கிறார்கள். நட்பாகப் பிள்ளைகளிடம் உரையாடும் குடும்பங்களில் இந்தப் பிரச்னை இல்லை. அதற்குச் சில வழிகள்:

- உரையாடுவதற்குப் பொருத்தமான நேரத்தைத் தேர்வு செய்யுங்கள். இரவு குடும்பம் மொத்தமும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் நேரங்களில், ஆரோக்கியமான உணவுப்பழக்கம், அன்றைய நாளில் அவர்கள் வாழ்வில் நடந்த சம்பவங்கள், அன்றைய பரபரப்பான செய்திகள், அவர்களின் நண்பர்கள் சிலரின் எதிர்காலத் திட்டம் என்று முரண்பாடுகள் ஏற்படாத பொதுவான விஷயங்கள் பற்றிப் பேசலாம்.

- வாகனத்தில் அவர்களுடன் செல்லும்போது சாலைப் பாதுகாப்பு, வாகனங்கள், போக்குவரத்து நெரிசல், சட்டங்கள் என்று பல விஷயங்கள் பேசலாம். டி.வி அல்லது செல்போனில் படம் பார்க்கிறார்கள் என்றால், அந்தப் படம் சொல்லும் சமூகக் கருத்துகள் குறித்து விவாதித்து அவர்களுக்குள் அக்கறையை விதைக்கலாம்.

- இரவு தூங்கப் போவதற்கு முன்பு தனியாக நிகழ்த்தும் உரையாடல்தான் முக்கியமானது. அவர்கள் தங்களின் பிரச்னைகளை, கேள்விகளை அப்போது மனம்விட்டுப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள். கோபமோ, எரிச்சலோ காட்டாமல் அதற்குத் தீர்வுகளைக் கனிவான மொழியில் சொல்லுங்கள்.

- அவர்களுக்கு என்ன விஷயங்கள் பேசப் பிடிக்குமோ, அதிலிருந்து உரையாடலை எப்போதும் தொடங்குங்கள். விளையாட்டு, இசை, ஃபேஷன், வீடியோ கேம் என எல்லாவற்றிலும் அவர்களுக்குப் பிடித்தவை எனச் சில இருக்கும். அவை பற்றிப் பேச ஆரம்பித்து, அப்படியே நீங்கள் சொல்ல விரும்பும் விஷயத்தை விவரிக்கலாம்.

- நாம் பேசும் விஷயங்களுக்கு அப்பாவோ, அம்மாவோ எப்படிப் பதில் சொல்கிறார்கள், என்ன மாதிரி உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்று டீன் ஏஜ் பிள்ளைகள் கவனிக்கிறார்கள். எனவே, அவர்கள் தங்கள் பிரச்னைகள் குறித்துச் சொல்லும்போது கோபத்தைக் காட்டாதீர்கள். அடுத்த முறை அவர்கள் வந்து எதையும் சொல்லாமலே போய்விடுவார்கள்.

- உங்கள் உரையாடலில் அதிகாரத் தோரணை இருக்கக்கூடாது. சக வயதில் இருக்கும் மற்றவர்களுடன் எப்படிப் பேசுவீர்களோ, அதேபோன்ற தொனியில் அவர்களுடன் உரையாடுங்கள்.

- நீங்கள் சொல்லும் ஆலோசனைகளை ஏற்காமல் அவர்கள் விவாதிக்கலாம். அல்லது, ‘நீங்கள் சொல்வது தப்பு’ என்று எதிர்க்கலாம். “நான் சொல்வதைக் கேள்” என்று மிரட்டாமல், நீங்கள் ஏன் அப்படி ஒரு ஆலோசனை சொல்கிறீர்கள் என்பதைக் காரணங்களுடன் விளக்குங்கள். அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

- அவர்களின் அந்தரங்கத்துக்கு மதிப்புக் கொடுங்கள். யாருடனோ அவர்கள் போனில் பேசுவதை ஒட்டுக் கேட்டுவிட்டு விசாரிக்காதீர்கள். மாறாக, தங்களின் எந்தக் குழப்பத்துக்கும் உங்களிடம் வந்து தீர்வு கேட்கும் நெருக்கத்தை அவர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்குத் தெரியாமல் எந்த ரகசியத்தையும் வைத்திருக்க மாட்டார்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



Inners for Winners
RAMRAJ
VESTS
BRIEFS • TRUNKS
Uplift
your spirit from
Within
Shreyas Iyer - Cricketer
SUKRA SUPER FINE COTTON VESTS
ROMEX SUPERIOR BANIANS
RISE-UP PREMIUM BANIANS
ACOSTE LUXURY INNERWEARS
Breeze Eye Let Vests
WinStripe STRIPED BANIANS
ARCHERY GYM VEST
COMPACT PREMIUM COTTON RIB VESTS
LITTLE STARS KIDS INNERWEARS
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-01-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

